Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

இலவசப் பிரதி

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2035 ஐப்பசி-12 28-10-2004 வியாழக்கிழமை ஓசை -253



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10476) விநாயகர் வீதி, மயிலிட்டி.

## பாதுகாப்பிற்குப் பெருமளவு நிதி; எதிர்க்க தமிழ்க் கூட்டமைப்பு முடிவு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் எதிர் வரும் 10 ஆம் திகதி முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புநிதி ஒதுக்கீட்டு விவாதத்திற்கெதிராக வாக்களிக்க தமிழ் கூட்டமைப்பு தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இலங்கையின் வரலாற்றில் முதன் முறையாகப் பாதுகாப்பிற்கு 76 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருப்பதாகவும் யுத்த நிறுத்தம் மற்றும் சமாதானம் நிலவும் காலப்பகுதியில் இவ்வாறு பாதுகாப்பிற்கு நிதி ஒதுக்கியிருப்பது தமிழ் மக்களிடையே அதிக சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ளார். ஏற்கனவே ஐக்கிய தேசிய முன்னணி அரசில் 55 பில்லியன் நிதி பாதுகாப்பிற்கு ஒதுக்கப்பட்ட போது அதனைப் பாராளுமன்றில் தான் கண்டித்ததாகத் தெரிவித்தார் ஜோசப்பரராஜசிங்கம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழு அயர்லாந்திற்குப் பயணம்

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான மூவர்கொண்ட குழுவினர் அயர்லாந்தினைச் சென்றடைந்துள்ளனர். இவர்கள் ஐரிஸ் அரசின் வெளிநாட்டமைச்சக அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளனர் என டுப்ளினில் இருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மற்றும் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோரே டுப்ளின் பேச்சுக்குச் செல்லும் குழுவினராவர். இவர்கள் ஒக்ரோபர் 30வரை அங்கு தங்கியிருப்பர் எனவும் தெரியவருகிறது.

# ஜே.வி.பி-சு.க.கூட்டமைப்பை ஏற்படுத்தியதன் மூலம் எண்ணெய்யுடன் தண்ணீரைக் கலந்துள்ளேன்

## பிணக்குகளைத் தீர்க்க உயர்பீடம் அமைக்கப்பட்டுள்ளதென்கிறார் அனுரா



**சிறிலங்கா சுதந்திரக் கட்சி –ஜே.வி.பி. கூட்டமைப்பை அமைத்ததன் மூலம் எண்ணெய்யுடன் தண்ணீரைக் கலந்த வேலையைத் தான் செய்துள்ளதாகவும் கூட்டமைப்புக்குள் நிலவும் பிரச்சினைகளைத் தீர்க்க உயர்பீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அனுராபண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.**

சு.க-ஜே.வி.பி. இணைந்து அமைக்கப்பட்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிரேஷ்ட இணை அமைப்பாளரும் இக் கூட்டமைப்பு உருவாக முன்னின்று செயற்பட்டவருமான அனுரா பண்டாரநாயக்க ஊடகமொன்றுக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்த கருத்துக்களுக்கு பதிலளிப்பதற்காகவே அநுரா பண்டாரநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் கூட்டமைப்பை உருவாக்கியதன் மூலம் எண்ணையுடன் தண்ணீர் கலப்பது போன்ற ஒரு வேலையைச் செய்ததாகவும் அவர் மேலும் கூறினார்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் தீர்மானங்கள், கொள்கைகள் என்பன தமது கொள்கைகளில் இருந்து மாறுபட்டது

(12 ஆம் பக்கம் பார்க்க)

-வடமராட்சி மந்திகைப் பகுதியில்-

## வளவினுள் புகுந்த வான் மோதியது ஆசிரிய ஆலோசகர் பரிதாப மரணம்

(வடமராட்சி)

வடமராட்சியின் மந்திகைப்பகுதியில் நேற்றுக் காலைஇடம் பெற்ற வாகனவிபத்தில் சிக்கி தீவகக்கல்விப்பணிப்பாளர் பொன்னையா வேணுகோபால வாணிதாசன் (வயது 53) உயிரிழந்துள்ளார். விடுமுறை தினமான நேற்று மந்திகை தெருமூடிமடப்பகுதியிலுள்ள சகோதரி வீட்டிற்குச் சென்ற வேளையிலேயே இவர் விபத்திற்குள்ளாகியுள்ளார்.

யாழ்-பருத்தித்துறை வீதியூடாக பயணித்த தனியார் பயணிகள் பேருந்தொன்று வீதியோரமாக உள்ள குறித்த வீட்டினுள்திடீரென பாய்ந்துள்ளது. அவ்வேளையில் வாயிலில் நின்றிருந்த அவர் வாகனத்தினால் மோதப்பட்டு ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இதே வேளை சம்பவத்தின் போது படுகாயமடைந்த மேலும் இருவர் சிகிச்சைக்காக யாழ். போதனாவைத்திய சாலையினில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் வீதியூடாக துவிச்சக்கரவண்டியில் பயணித்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.ஆனைக்கோட்டைப் பகுதியில் வெட்டுக் காயத்துடன் பெண்ணின் சடலம்

வலிகாமத்தில் உயரப்புலம் ஆனைக்கோட்டைப் பகுதியில் வெட்டுக்காயத்துடன் வயோதிப மாது ஒருவரது சடலம் நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.பளை இத்தாவில் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து உயரப்புலம், ஆனைக் கோட்டைப் பகுதியில் தனது மகளுடன் வசித்து வந்த பே.சிலுப்பிள்ளை லோறஞ்சியா(வயது 79) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வீட்டின் பின்புறமாக கழுத்தில் பாரிய வெட்டுக்காயத்துடன் சடலம் கண்டு பிடிக்கப்பட்டது. சடலம் பனையோலையினால் மூடப்பட்டிருந்ததாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை சடலம் கண்டு பிடிக்கப்பட்டமை தொடர்பாக உயிரிழந்த மூதாட்டியின் இரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கைக்குண்டு வைத்திருந்ததாக மூவர் பொலிசாரினால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் கைக்குண்டு வைத்திருந்ததாகக் கூறப்படும் தேசவிரோதி கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் உட்பட மூவர் சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கருணாவின் குழுவைச் சேர்ந்தவரான கிரானைச் சேர்ந்த நடராசா சோமசுந்தரம் என்பவரும் ஆட்டோச் சாரதியான வாழைச்சேனையைச் சேர்ந்த முஸ்தபா மொகமட் அமீர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## படைமுகாம் இருந்தபகுதியிலேயே மனித எலும்புக் கூடுகள் மீட்பு

தமிழீழ காவல்துறையினர் தகவல்



வடமராட்சி கிழக்கு வர்த்தராயன் பகுதியில் தென்னைமரத்துக்கு கிடங்கு வெட்டும் போது மனித எலும்புக் கூட்டின் சில பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் தென்பட்ட இந்த மனித எலும்புக்கூடு பற்றி அப்பகுதி தமிழீழ காவல துறையினரிடம் சென்று விபரத்தைக் கேட்டபோது வத்தராயன் பகுதியில் உள்ள குணரத்தினம் ஜெயகருணா என்பவருடைய காணிக்குள்ளேயே இந்த எலும்புக்கூட்டின் பாகங்கள் கிடைத்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க

-உருத்திரபுரம் பகுதியில்

## கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு குடும்பஸ்தர் ஒருவர் கொலை

(அலுவலக செய்தியாளர்)

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சி உருத்திரபுரம் 10 ஆம் வாய்க்கால் பகுதியில் கடைச்சல் பட்டறை ஒன்றில் 43 வயது நிரம்பிய ஆண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய் இரவு கொலை செய்யப்பட்டுள்ள நடராசா யோகேஸ்வரன் என்பவர் மதா கோயிலடி, அல்வாய் கரவெட்டி என்ற இடத்தைச் சொந்த முகவரியாகக் கொண்டவரும் தற்போது வேலைக்காக கிளிநொச்சி, உருத்திரபுரம் 10 ஆம் வாய்க்கால் பகுதியில் வீடொன்றில் தங்கிநின்று வேலை செய்து வந்தவருமாவார்.எனவும் தெரியவருகின்றது.

மேற்படி கொலை செய்யப்பட்ட நடராசா யோகேஸ்வரன் வீட்டில் இருந்து கூட்டிச் செல்லப்பட்டு அவர் வேலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பார ஊர்திகள் பயணிக்கத்தடை

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு பரந்தன் நெடுஞ்சாலையில் உள்ள வெலிக்கண்டல் பாலம்திருத்த வேலைக்காகப் போடப்பட்ட பதில் பாதை யினூடாக நேற்று முதல் பேருந்து மற்றும் பாரஊர்திகளின் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி பதில் பாதை தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைக்கு உள்ளாகி உள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய விசேட தூதுவரை ஜே.வி.பித் தலைவர் சந்திப்பார்

ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசியுடனான ஒரு சந்திப்புக்கு ஒழுங்கு செய்துள்ளதாகவும் அதை யசூசி அகாசி ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், ஜப்பான் தூதரகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இக்கலந்துரையாடல் இன்று அல்லது நாளை இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவே ஜே.வி.பி யினர் ஜப்பான் விசேட தூதருடனான முதலாவது சந்திப்பு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரும் யசூசி அகாசியைச் சந்திக்கத் திட்டமிட்டுள்ளனர். அத்துடன் யசூசி அகாசி சனாதிபதி, எதிர்க்கட்சித்தலைவர் ரணில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சின்னப்பு செல்வராஜா ஆகிய எனது பேர்ஸ் 26.10.2004 ஆம் திகதி பரந்தனுக்கும் முருகானந்த மகாவித்தியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. அதில் தே.அ. அட்டை, நிரந்தர பயணச் சீட்டு சாரதி அனுமதிப்பத்திரம், காசு 1200/= யுடன் தவறியது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனை யாழ்சாலையில் ஒப்படைக்க வேண்டுகிறேன். (5228)

## அபிவிருத்திச் சங்க நிர்வாகிகள் தெரிவு

செம்மலை மகாவித்தியாலய புதிய அபிவிருத்திச் சங்கம் கடந்த 15ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டது.


தலைவராகப் பாடசாலை அதிபர் திருமதி சூ.ஜெயராசா, செயலாளராக செ.இரத்தினம், பொருளாளராக ந.ஜோதிலிங்கம் ஆசிரியர் ஆகியோர் உட்பட 12 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப் பட்டனர். (20)

# மீள் திரும்ப முடியாத குடும்பங்களிற்கு சுயதொழில் முயற்சிக்கு உதவி

(உடையார்கட்டு)

உடையார்கட்டு வடக்குப் பகுதியில் இடம் பெயர்ந்து மீள் திரும்ப முடியாத 35குடும்பங்களிற்கு யு.என்.எச்.சி.ஆர். போரூட் நிதி உதவியுடன் சமூகப் பொருளாதார வளர்ச்சி நிறுவன அனுசரணை யுடன் சுய தொழில் முயற்சிக்கான உதவிகள் அண்மையில் வழங்கப்பட்டன.

இதில் 16குடும்பங்களிற்குப் பசுமாடுகளும், 10 குடும்பங்களிற்கு நடமாடும் வியாபாரத்திற்கும், துவிச்சக்கரவண்டி, தராசு, மூலதனம் என்பனவும், மற்றும் 02 குடும்பங்களிற்கு சிறுவியாபாரத்திற்கான உதவித் தொகையும் வழங்கப்பட்டு இக் குடும்பங்களின் வருமான அதிகரிப்புக்கு உதவியுள்ளதாக ச.பொ.வ.நி.இணைப்பாளர். யூட் தெரிவித்தார்.(19)




# மல்லாவி மத்திய கல்லூரியில் நூலக தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

(மல்லாவி)

அனைத்துலக நூலக தினத்தை முன்னிட்டு மு/மல்லாவி மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த திங்கள் காலை 11மணிக்கு நூலக உதவிஆசிரியர் பா.றூஜீணா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை துணுக்காய் வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் சு. பரந்தாமன் ஏற்றி வைக்க, பாடசாலைக் கொடியை கல்லூரி முதல்வர் திருமதி கோ. தேவராஜா ஏற்றி வைத்தார்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சிறிஸ்கந்தராஜா துணுக்காய்க்கோட்டக் கல்வி அதிகாரி ஆ.சுந்தரமூர்த்தி, சு.பரந்தாமன், எஸ் இராஜேஸ்வரன்



எஸ்.சிவபிரகாசம் ஆசிரியர், மேரியூலியட், கல்லூரி முதல்வர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மாணவர்களின் நூலகமும் வாசிப்பும் தொடர்பான பேச்சுக்கள் இடம்பெற்றது. இறுதியாக துணுக்காய் வலயப் பாடசாலைகளில் சிறந்த நூலகமாக மல்லாவி மத்திய கல்லூரி நூகலம் தெரிவு செய்யப்பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது. (24)

## சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

தேசியக்கல்வி நிறுவனத்தினரால் நடாத்தப்பெறும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறி பகுதி 1 பரீட்சைக்கு கிளிநொச்சி பிராந்திய நிலையத்தினூடாக தோற்றி சித்தியெய்தத் தவறியவர்களுக்கான மீள் விண்ணப்பம் அனுப்புவது தொடர்பாக எதிர் வரும் 30 ஆம் திகதியன்று பகல் 12 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியில் சந்திப்பு இடம்பெற ஏற்பாடாகியுள்ளது.

எனவே அன்றைய தினம் மேற்படி பரீட்சையில் சித்தியெய்தத் தவிறியவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் சிரேஸ்ட விரிவுரையாளர் க.சின்னராசா வேண்டியுள்ளார். (சோ)

## உள்ளீடுகள் வழங்கல்

உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் கிளி.மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும்,உணவு விவசாய நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட் கிழமை ஜெயந்திநகர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் கமக்கார அமைப்புத் தலைவரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விவசாயிகளுக்கான உள்ளீடுகளாக தலா ஒரு விவசாயிக்கு 05 கிலோ உழுந்து ,மரக்கறி விதைப் பைக்கற்றுக்களும், மொத்தம் எழுநூறுரூபா பெறுமதியான உள்ளீட்டுப் பொருட்கள் வழங்கப் பட்டன. இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் சி.சிவநேசன்,உணவு விவசாய நிறுவன மாவட்ட இணைப்பாளர், பிரதிநிதிகள்,கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள்,பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

–புதுக்குடியிருப்பு பிரதேச–

## தே.எ.பேரவையினருக்கான மாதாந்த சங்கம நிகழ்வு

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினருக்கான மாதாந்த சங்கம நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு புதுக்குடியிருப்பு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தளத்தில் நடைபெறவுள்ளது.இச் சங்கம நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு புதுக்குடியிருப்பு முள்ளியவளைக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர். பிறையாளன் கேட்டுள்ளார். (19)



அமரர் ஜோன்அந்தோனிப்பிள்ளை ஞாபகார்த்தமாக லண்டனிலுள்ள அன்னாரின் மகன் காந்தரூபனினால் வாசிப்புவாரத்தினை முன்னிட்டு ஐம்பது ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்த அறிவியல் நூல்களினை உருத்திரபுரம் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் வைபவ ரீதியாக கையளிக்கப் பெற்றதனைப்படத்தில் காணலாம் (சோ.கு)

# குரவில் தமிழ் வித்தியாலய புதிய கட்டடத்திறப்பு விழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு -குரவில் தமிழ் வித்தியாலயத்திற்கான புதிய கட்டடத் திறப்புவிழா நேற்று 10.00மணிக்கு பாடசாலைஅதிபர் மேகநாதன் தலைமையில் ஆரம்பமானது. இத்திறப்பு விழா நிகழ்விற்கான மங்கல விளக்கினை குரவில் அம்மன் ஆலய பூசகர், பாடசாலைப் பெற்றார் ஆசிரியர் சங்கச் செயலர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் அறிவன்பன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து புதிய கட்டடத்தினை வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் திறந்து வைத்தார். பெயர் பலகையை கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா திரைநீக்கம் செய்து வைத்தார்.

இங்கு பாடசாலை வளர்ச்சி, கல்வி விடயங்கள் குறித்து கருத்துக்களை முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முருந்தன் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம், முல்லை மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர், அறிவன்பன், கல்விப்பணிப்பாளர் குருகுலராஜா ஆகியோர் வழங்கினர்.கருத்துரையைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

# சமாதானச் சிலுவைப் பயணம் இன்று கிளி.நகரில் இடம்பெறும்

(அலுவலக செய்தியாளர்)

தென்னிலங்கையிலிருந்து எடுத்து வரப்பட்ட சமாதானச் சிலுவை கிளி. நகர் பகுதிக்கு தனது பயணத்தை மேற்கொள்கிறது. மன்னார் மறைமாவட்டம், யாழ். மறைமாவட்டம் என்பவற்றிற்குத் தனது சமாதானப் பிரார்த்தனைகளைச் செலுத்தி நேற்று மாலை 4.00 மணியளவில் வடமராட்சி கிழக்கு தாளையடிப் பங்கிற்கு இச் சிலுவை எடுத்து வரப்பட்டது.

மேற்படி சமாதானச் சிலுவையானது தாளையடிப் பங்கில் மருதங்கேணிச் சந்தியில் இருந்து அனைத்து மக்களும் அமைதிப் பேரணியாக நகர்ந்து வர தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்து வரப்பட்டு. அங்கு சர்வமதத் தலைவர்களின் சமாதானம் வேண்டிய பிரார்த்தனைகள் நடைபெற்றன.

இச் சமாதானச் சிலுவை இன்று கிளிநொச்சி நகர்ப் பகுதிக்கும் தனது பயணத்தினை மேற்கொள்ள உள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. (கு.தீ)

## 2005 சனாதிபதி தேர்தலுக்கு ஐ.தே . கட்சி ஆரம்பமகிறது

2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடக்க இருக்கும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்குச்சகல ஆயத்தங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி தற்பொழுது ஆரம்பித்துள்ளது. இதன் படி ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் சனாதிபதி வேட்பாளரின் பெயர் ,ஐக்கிய சுதந்திர முன்னணி மக்க ளுக்கு அளித்த பொய் வாக்குறு திகள் சம்பந்தமாக எதிர்வரும் டிசம்பர் மாதம் ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பதாவது ஆண்டு விழாவில் ஆராயப்பட்டு உள்ளன

## காணவில்லை

விசுவமடு நெத்தலியாறு மேற்கைச் சேர்ந்த நவநீதமணி மகேந்திரன் என்பவர் கடந்த 24.10.2004 தொடக்கம் காணாமற் போயுள்ளார். காணமற் போன அன்று மஞ்சள் நிற கவுண் அணிந்திருந்தார். 45 வயதான இவர் சுமாரான உயரமும் சிவந்த நிறமும் சுருள் முடியும் உடையவர் இவர் ஒரு மன நோயாளி என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரைப் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் அருகிலுள்ள காவல் பணிமனைக்கோ அல்லது முருகதாஸ் நெத்தலியாறு மேற்கு, பாண்டியன் ஒழுங்கை என்ற முகவரிக்கோ தெரியப்படுத்துமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
க. வாணி,
அக்கராயன்

(5227)



-யூதக்குடி யேற்றங்களை வாபஸ் பெறும் ...

# கடுமையான வாதப் பிரதிவாதங்களின் பின் இஸ்ரேல் பாராளுமன்றம் அங்கீகாரம்

(டெல்அவில்)

**யூதக் குடியேற்றங்களை வாபஸ் பெறும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோனின் யோசனைக்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இஸ்ரேல் அமைச்சரவையின் ஆதரவைப் பெற்ற இந்த யோசனை மீதான விவதாம் கடந்த இரண்டு தினங்களாக இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் இடம் பெற்றது.**

1967 ஆம் ஆண்டு இடம் பெற்ற மத்திய கிழக்கு யுத்தத்தின் போது இஸ்ரேலினால் கைப்பற்றப்பட்ட இடங்களில் யூதக் குடியேறங்களை வாபஸ் பெறும் யோசனை மீது கடுமையான வாதப்பிரதிவாதங்கள் பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட பின்னர் நேற்று முன் தினம் இடம் பெற்ற வாக்கெடுப்பின் மூலம் 22 வாக்குகள் வித்தியாசத்தில் யோசனை நிறைவேற்றப் பட்டது. இதனடிப்படையில் யோசனைக்கு ஆதரவாக 67 வாக்குகளும் எதிராக 45 வாக்குகளும் வழங்கப்பட்டுள்ளன.

இதே வேளை யூதக் குடியேற்ற வாபஸ் தொடர்பான யோசனைக்கு எதிராக வாக்களித்த அமைச்சர் ஒருவரையும் பிரதியமைச்சர் ஒருவரையும் இஸ்ரேலிய பிரதமர் ஏரியல் ஷரோன் அவர்கள் பதவியிலிருந்து விலக்கியுள்ளார்.

இதனையடுத்து யூதக் குடியேற்ற வாபஸ் தொடர்பாக 2 வாரங்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பு நடத்த ஷரோன் இணங்காவிட்டால் மூன்று அமைச்சர்களுடன் தானும் பதவி விலகப் போவதாக பிரதமரின் பிரதான லிக்குட் கட்சி எதிரணியான நிதியமைச்சர் மெஞ்ஞுமின் நிட்டன் ஞாகோர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து இப் பகுதியிலிருந்து வெளியேறி வேறு இடங்களில் குடியமர விரும்பும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 இலட்சம் அமெரிக்க டொலர்கள் நஷ்ட ஈடு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது மாறாக இந்த திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த படையினரிடம் முரண்படுவோர் 5 வருட சிறைத்தண்டனைக்கு உட்படுவர் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.



அமெரிக்கக் குடியரசுக்கட்சி வேட்பாளர் ஜோன்ஹெரி(இ) முன்னாள் அமெரிக்க சனாதிபதி பில்கிளின்ரனுடன் உரையாடுகின்றார்.

# அமெரிக்காவில் படுகொலைச் சம்பவங்கள் கடந்த ஆண்டைவிட இம்முறை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் கடந்த ஆண்டில மட்டும் 16ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டவர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இது முந்தைய ஆண்டைவிட அதிகம் குற்றச் சம்பவங்கள் தொடர்பான எப்பிஜ அமைப்பின் ஆண்டு அறிக்கையில் இவ்விபரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் இடம்பெற்றுள்ள விவரங்கள், 2003ஆம் ஆண்டில் மட்டும 16 ஆயிரத்து 503 படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. 2002ஆம் ஆண்டை விட இது 1.7 சதவீதம் அதிகம் கொலை செய்யப்பட்டவர்களில் 90சதவீதம் பேர் பெரியவர்கள். 78 சதவீதத்தினர் ஆண்கள், 48.5 சதவீதத்தினர் கறுப்பர்கள், 71சதவீத கொலைகளில் துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது. கத்தி மற்றும் வெட்டுவதற்கான ஆயுதங்களைப் பயன்படுத்தி 13.4 சதவீத கொலைகள் செய்யப்பட்டுள்ளன. கைகள், கால்கள், முஷ்டி ஆகியவற்றின் மூலம் 7சதவீத கொலைகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையே துப்பாக்கி பயன் படுத்தி குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது தீவிரமாக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அமெரிக்க அட்டார்னி ஜெனரல் ஜான் ஆஷ்கிராப்ட் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க ஆயுதக்கொள்வனவு; தாய்வானில் பெரும்சர்ச்சை

(வோஷிங்டன்)

அமெரிக்காவிடம் இருந்து அதிக விலை கொடுத்துத் தாய்வான் அரசு ஆயுதங்களை வாங்குவதாகச் சர்ச்சை எழுந்துள்ளது.

இது குறித்து விவாதிப்பதற்காக ஆளும் கட்சியான சனநாயக முன்னேற்றக் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டு கூட்டமொன்றை நேற்று முன்தினம் நடத்தியுள்ளனர்.

இவ்வேளை ஆயுதங்களை வாங்குவதற்காகத் தாய்வான் அரசு பெருமளவு பணத்தை வீணடிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் புகார் கூறினார்கள். இதனை ஆளும்கட்சி உறுப்பினர்கள் மறுத்ததால் கூட்டத்தில் பெரும் வாக்குவாதம் ஏற்பட்டது. வாக்குவாதம் முற்றியதால் இருதரப்பினரும் தமக்கு எதிரே மேசைமீதிருந்த உணவுப் பெட்டியில் உள்ள உணவுப்பொருட்களையெடுத்து ஒருவர் மீது ஒருவர் வீசிக் கொண்டதால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## துனீஷிய அதிபர் தேர்வு

துனீஷியா அதிபராக பென் அலி(68) நான்காவது முறையாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவருக்கு 94.49 சதவீத வாக்குகள் கிடைத்துள்ளது. கடந்த 17 ஆண்டுகளாக அந்நாட்டு அதிபராக இருந்து வருகிறார் பென்அலி. 1987இல் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தார். அவர் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பென்அலி பாராட்டப்பட்டாலும் மனித உரிமை தொடர்பான விவகாரங்களில் கடுமையாக விமர்சிக்கப்படுகிறார்.

## இறுதிக்கட்டப் பிரசாரத்தில் அமெரிக்க சனாதிபதி புஷ்

(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு புஷ் இறுதிக்கட்டத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் ஈராக்-ஆப்கானிஸ்தான் யுத்தம், பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கை ஆகியன தொடர்பாக அடுத்த ஆண்டு செலவிற்கென 75 பில்லியன் டொலர்களைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை ஒன்றை காங்கிரசிற்கு அனுப்பி வைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## ஏ வுகணைச் சோதனை நடாத்த தென்கொரியா தயாராகின்றது

-தென்கொரியப் பத்திரிகை தகவல்-

வடகொரியா ஏவுகணைச் சோதனையினை நடத்தத் தயார் செய்து கொண்டிருப்பதாகத் தென்கொரியப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜாமோங்கிற்கு 90 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள ஜாங்கூவில் ஏவுகணைத் தளமொன்றைக் கண்காணிக்கும் வேலையை அமெரிக்கா,யாப்பான் மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகள் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளன. என்று மூத்த அரச அதிகாரி ஒருவர் கூறியதாகத் தென்கொரிய செய்திப்பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

## தாய்லாந்தில் 80 பேர் உயிரிழப்பு அந்நாட்டுப் பிரதமர் கவலை தெரிவிப்பு

(பாங்கொங்)

தாய்லாந்தில் இஸ்லாமிய இளைஞர்கள் கடந்த திங்கட் கிழமை நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது இராணுவத்தின் பாதுகாப்பில் இருந்த 80 பேர் உயிரிழந்ததற்கு தாய்லாந்துப் பிரதம மந்திரி கவலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பிரதம மந்திரி ஷச்சின் சினோவர்ரா பாதுகாப்புப் படையினர் முஸ்லிம் கலவரத்தைக் கையாள்வதில் தவறிழைத்திருக்கிறார்கள். என்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆர்ப்பாட்டக்காரர்களை அகற்றுவதற்கு பலாத்காரம் பிரயோகிக்கப்படுவதை அரசாங்கம் விரும்பவில்லையென்று கூறிய தாய்லாந்துப் பிரதம மந்திரி கைது செய்யப்பட்டவர்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு செல்லும் போது இந்தத் தவறு நடந்துள்ளதென்றும் தாய்லாந்துப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஷாஸ்னி விண்கலம் டைட்டன் பற்றித் தகவல்

அமெரிக்க ஐரோப்பிய விண்கலம் "ஷாஸ்னி" சனிக்கிரகத்தின் மிகப்பெரிய துணைக் கிரகமான டைட்டன் பற்றிய புகைப்படங்களை அனுப்பத்தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் நோயால் அவதிப்படுவதாகத் தகவல்

(ஜெருசலேம்)

பாலஸ்தீன தலைவர் யசீர் அரபாத் (வயது74) நோயால் அவதிப்பட்டு வருகிறார். வாந்தி, வயிற்றுவலி மற்றும் பல்வேறு உடல்உபாதைகள் அவரைப் பீடித்துள்ளது. தற்போது அவர் உடல்நிலை சீராக இருப்பதாக பாலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன. முன்னதாக மேற்குக்கரை நகரமான ரமல்லாவில் மருத்துவமனையில் தங்கி சிகிச்சைபெற அராபத்திற்கு இஸ்ரேல அரசு அனுமதி வழங்கியதாகச் செய்திகள் வெளியாகின.

"அரபாத் ரமல்லா செல்ல வேண்டிய அவசியம் இல்லை. அவர் உடல்நிலை தேறிவருகிறது" என்று பாலஸ்தீன ஆணையக அதிகாரிகள் தெரிவித்தனர். மத்திய கிழக்கில் அமைதி முயற்சிக்கு அரபாத் தடையாக இருக்கிறார் என்று கூறி ரமல்லாவுக்கு அவர் நுழைய கடந்த மூன்று ஆண்டுகளாக இஸ்ரேல் தடைவிதித்திருந்தது. அங்கிருந்து அவர் வெளியே வந்தால் உயிரோடு திரும்பமுடியாது என்றும எச்சரித்திருந்தது. அதுமுதல் வீட்டுச்சிறைபோல் முகாட்டாவிலேயே இருந்து வருகிறார் அரபாத்.



பலூஜா ஈராக்கில் விமானத் தாக்குதலில் அழிக்கப்பட்ட வீட்டின் சிதைவுகளின் மேல் ஏறிவிளையாடும் சிறுவர்கள்



இடம்பெயர்ந்துள்ள சூடான் சிறுவர்கள் ஒரு தண்ணீர்க்குழாயின் அருகே சூழ்ந்திருப்பதைக் காணலாம்.

## தீவிரவாதிகள் ரொக்கெட் தாக்குதல் பாக்.பழங்குடி மக்கள் 9பேர் பலி

ஆப்கானிஸ்தானின் எல்லைப்புறத்திற்கு அருகாமையில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் அல்-ஹைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாதிகள் நடத்திய ரொக்கட் தாக்குதலில் குறைந்தது 9 பாகிஸ்தானின் பழங்குடி மக்கள் கொல்லப்பட்டும் 5பேர் காயமடைந்துமுள்ளனர். பாகிஸ்தான் பாதுகாப்புப் படையின் உதவியுடன் தீவிரவாதிகளினைத் தேடும் நடவடிக்கைக்குப் பழங்குடியினர் தயாரான போதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதென்று இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# வடிகால்வேலை முற்றுப்பெறவில்லை

# குடியிருப்புக்களில் வெள்ளம் புகுந்தது

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி 8ஆம் வாய்க்கால் உருத்திரபுரம் ஊடாக சிவநகர் குளத்திற்கான வடிகால் வேலைகள் முற்றுப் பெறாததால் வாய்க்காலினூடாக நீர் செல்லமுடியாது குடியிருப்புப் பகுதியில் வெள்ளம் தேங்கியுள்ளது.**



நேற்று முன்தினம் பெய்தமழை காரணமாக மழை நீர் மேற்படி வாய்க்கால் ஊடாகச் செல்ல முடியாத நிலையில் தேக்கமடைந்துள்ளமையின் காரணமாக பல மேட்டு நில குடியிருப்பினுள் மழை வெள்ளம் உட்புகுந்த வண்ணம் உள்ளதனைக் காணக்கூடியதாக உள்ளது. மேற்படி வடிகாலின் முற்பகுதிகளை உடனடியாக செப்பனிட்டு நீர் வழிந்தோடக் கூடியவகையில் திருத்தியமைக்கப்படாதவிடத்து மேலும் மழைபெய்யும் பட்சத்தில் தற்போது அமைக்கப் பெற்றுள்ள புதிய அணைகள் உடைப்பெடுப்பதுடன் இரத்தினபுரம், 8ஆம் வாய்க்கால் கிராமங்கள் பாரிய சேதத்திற்குள்ளாக நேரிடும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (சோ)

## விவசாய நடவடிக்கைகளுக்கு உள்ளீடு வழங்கல்

துணுக்காய், பாண்டியன் குளம் பிரதேசத்தின் உணவு விவசாய ஸ்தாபனத்தின் உதவியோடு 200 பயனாளிகளுக்கு விதைநெல் வழங்கப்பட்டுள்ளது. வறியநிலையிலுள்ள விவசாயிகள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் இத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உற்பத்தி மேற்கொண்டு தரமான நெல் மீண்டும் கொள்வனவு செய்வதற்கு ஏற்ற ஒழுங்குகளை விவசாயத் திணைக்களமும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் ஏற்பாடு செய்துள்ளன. என பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் கு.ரசிகுமார் தெரிவித்தார்.

உணவு உற்பத்தியை மேம்படுத்தும் நோக்கில் கிளி. மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் உணவு விவசாய நிறுவனமும் இணைந்து நடைமுறைப்படுத்தும் திட்டத்தின் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சாந்தபுரம் பாடசாலையின் கமக்கார அமைப்புத் தலைவர் தலைமையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விவசாயிகளுக்கான உள்ளீடுகளாக சிறுதானியம் மரக்கறி விதை பொருட்களாக ஒரு விவசாயிக்கு தலாரூபா 700 பெறுமதியான உள்ளீட்டுப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளிநகர் பிரதேச இணைப்பாளர் கி. சிவனேசன் உணவு விவசாய நிறுவன கிளி. மாவட்ட இணைப்பாளர் மா.செல்வராசா, கி.கேசவராசா கமக்கார அமைப்புப் பிரதிநிதி, பொது மக்கள் ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

## மன்னாரில் வறிய மாணவர்களுக்காக இலவச அப்பியாசக் கொப்பிகள்

(வவுனியா)

இலண்டன் சிறி கனக துர்க்கை இந்து ஆலய அறக்கட்டளை நிதியத்தின் நிதியுதவியுடன் மன்னாரில் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற மன்னார் புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள இலவச கணினிப் பயிற்சி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு இன்று இலவச அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளது. இந் நிகழ்விற்கு இலண்டன் சிறி கனகதுர்க்கை அம்மன் ஆலய நம்பிக்கை நிதியத்தின் மூத்த உறுப்பினர் திரு.பிரமேச்சந்திரன் அவர்கள் விருந்தினராகக்கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எஸ்.இனியவனும் கலந்துகொள்கிறார். வடக்கு கிழக்கு மலையகம் ஆகிய பகுதி களில் 15 கிராமிய தகவல் தொழில் நுட்ப நிலையங்களை தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு (TITA) திறந்து நிர்வகித்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

## யோகபுரம் மகா.வித்தியாலயத்தில் விளையாட்டுப் பயிற்சி முகாம்

(மல்லாவி)

வடக்குகிழக்கு கல்வி பண்பாட்டலுவல் விளையாட்டுத் துறையின் நிதி அனுசரணையுடன் முல்லை. மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றம் முல்லை. மாவட்ட விளையாட்டுத் துறையினருடன் இணைந்து யோகபுரம் யோகபுரம் மகாவித்தியாலயத்தில் 22ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை விளையாட்டுப்பயிற்சி முகாம் முல்லை. மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி எஸ்.சண்முக வடி வேல் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் மங்கல விளக்கினை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் நா.நந்தகுமார் ஏற்றி ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து மாங்குளம் மகாவித்தியாலயம், யோகபுரம் மகாவித்தியாலயம், பாலையடி மகாவித்தியாலயம், பாண்டியன் குளம் மகாவித்தியாலயம், மல் லாவி மத்தியகல்லூரி, துணுக்காய் மகாவித்தியாலயம் ஆகிய முன்னணிப் பாடசாலைகளில இருந்தும் இளைஞர் கழகங்களில் இருந்தும் 40இற்கும் மேற் பட்ட இளைஞர், யுவதிகள் பயிற்சி பெற்றனர். இப்பயிற்சிகளை முல்லை. மாவட்ட விளையாட்டு அதிகாரி ஜேம்ஸ் குரூஸ் துணுக் பிரதேச விளையாட்டு அதிகாரி மற்றும் விளையாட்டுப் பயிற்சியாளர்கள் வழங்கினர். (24)

## ஒதியமலைக் கிராமத்தை மீளக் கட்டியெழுப்பத் திட்டம்

ஒதியமாலைப் பிரதேச கிராமத்தை மீளக்கட்டி யெழுப்புவதற்கான கலந்துரையாடல் ஒதியமலை சனசமூகநிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கிராமம் சிறிலங்கா இராணுவத்தால் சின்னாபின்ன மாக்கப்பட்டது. அதனை மீளக்கட்டி யெழுப்புவதற்கான நிதியினை நிகொட் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இதேபோன்று பெரியகுளம் பகுதியும் நிகொட் நிறுவனத்தால் மீளக்கட்டியெழுப்புவதற்கான இறுதிக்கலந்துரையாடல் 29.10. 2004 பெரியகுளத்தில் இடம் பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

## திறைசேரிபணம் அனுப்பாததால் உலர்உணவு விநியோகம் தாமதம்

### முல்லை அரச அதிகாரி தகவல்

(முல்லை)

இடம் பெயர்ந்து முல்லைத் தீவு மாவட்டத்தில் தங்கியுள்ள மக்களுக்கான யூலை மாதத்திற்கான உலர்உணவு நிவாரணம் இது வரை வழங்கப்படாதுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் நாளாந்தம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கிளைகளுக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்புவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் மேற்பார்வையில் வழங்கப்படும் இந்த உலர்உணவு நிவாரண விநியோகம் தாமதமாவது குறித்து முல்லைத்தீவு கச்சேரி அதிகாரிகளிடம் கேட்டபோது நிவாரண விநியோகத்திற்கென அரசின் திறைசேரியினால் வழங்கப்படும் பணம், தாமதிப்பதாலேயே நிவாரண விநியோகமும் தாமதிப்பதாகக் கூறியுள்ளார்.

அரசின் இந்த நடவடிக்கையால் இடம் பெயர்ந்து இம்மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் பெரிதும் பாதிப்படைத்துள்ளனர். (20)

## பதியப்படாத பிறப்பு, இறப்பு ,திருமணங்கள் நடமாடும் சேவையில் பதிய ஏற்பாடு

(முல்லை)

முல்லை மாவட்டம் துணுக்காய் பிரதேசத்தில் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு இதுவரை செய்யா தவர்கள் நடமாடும் சேவை மூலம்பதிவினை மேற்கொள்ளலாமென முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி தெரிவித்தார்.வரும் சனிக்கிழமை பிறப்பு- இறப்பு பதிவு காரியாலய நடமாடும சேவை துணுக்காய் தமிழீழ நிர்வாக சேவை அலுவலகத்தில் நடைபெற உள்ளதாகவும் இதில் பொது மக்கள் தக்கமுறையில் சேவையைப் பெற்றுக கொள்ளுமாறும் அவர்கேட்டுள்ளார். (20)


## பிர.சபையின் அனுமதியுடனேயே கட்டடம் கட்டப்பட வேண்டும்

### -உள்ளூராட்சி உ.ஆணையாளர் தெரிவிப்பு


(முல்லை)


கரைதுறைப்பற்று, ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, மாந்தைகிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் எந்த விதமான கட்டடம் அமைப்பதனாலும் அந்தப்பகுதிப் பிரதேசசபையின் அனுமதி பெற்ற பின்பே கட்டப்படவேண்டுமென முல்லை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கிருஷ்ணசாமி தெரிவித்தார்.

அலுவலகக் கட்டடம், பாடசாலைக்கட்டடம், பொதுமண்டபம், வீடுகள், வியாபார நிலையங்கள், தொழிற்சாலைகள் என எவ்வகையான கட்டடங்கள் என்றாலும் அனுமதி பெற்றிருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (20)



**புதுக்குடியிருப்பு வைத்தியசாலை வளவில் பற்றைகள் வளர்ந்து நுளம்புப் பெருக்கமடைய ஏதுவாகியுள்ளது.**





ஒருவருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு அரசரத்தினம் வித்தியாலயக்கட்டடவேலை பூர்த்தி செய்யப்படாதநிலையிலுள்ளதையும், இடவசதியின்மையால் மாணவர்கள் மரநிழலில் கல்வி கற்பதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு- தவரட்ணம்)

# பிரதேசச் செயலர் பிரிவு ரீதியாக யாழ்.இல் மிதிவெடி அபாய விழிப்புணர்வு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ்.குடாநாடெங்கும் மிதி வெடி அபாயம் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் பாதுகாப்பு நிதியமும் (UNICEF) வெண்புறா செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் நிறுவனமும் இணைந்து மேற்கொண்டு வருகின்றது.**

இதனடிப்படையில் யாழ்.குடாநாட்டில் பிரதேசச் செயலர் பிரிவு ரீதியாக இந்நிறுவனங்கள் மிதி வெடி அபாய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடத்தி வருகின்றன.

அந்த வகையில் நாளை சங்கானைப் பிரதேச செயலகத்தில் மிதிவெடி விழிப் புணர்வுக் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது. (33)

# 40 அனலை தீவு மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணம் வழங்கல்

யாழ்.அனலை தீவுப் பிரதேச வாழ் கடற்றொழிலாளர்களின் தொழில் துறை மேம்பாட்டிற்கான உதவிகளை வழங்கப் பிரிட்டன் அரசு முன்வந்துள்ளது. கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் என்பவற்றால் பாதிக்கப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் இப்பகுதி வாழ் மீனவர்களது பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கிலேயே பிரிட்டன் இவ் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

அந்த அடிப்படையில் பிரிட்டன் அரசால் அனலை தீவுப் பிரதேச வாழ்மீனவர்கள் 40 பேருக்கு ஒவ்வொருவருக்கும் தலா 2500 ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்களை வழங்கியுள்ளது. (33)

# ஆங்கில பாடப்பயிற்சி நெறியை தொடர விரும்புவோர் தொடர்பு கொள்க

## சர்.தமிழீழ மாணவர் பேரவை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் மேற்படிப்புக்களை தொடரும் மாணவர்களுக்கான ஆங்கில பாடப்பயிற்சி நெறிகள் நடாத்தப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டில் மேற்படிப்புக்களைப் பயின்று வரும் மாணவர்களிடையே ஆங்கில மொழி அறிவு குறைவாக காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் இது குறித்து எவரும் கவனம் கெலுத்தாது இருந்து வருவதை அடுத்து சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இதற்கான ஏறபாடுகளைச் செய்துள்ளது.

இதனடிப்படையில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டிலான இவ் ஆங்கில பாட பயிற்சிநெறியில்இணைய விரும்புவோர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் யாழ்.பரமேஸ்வராச் சந்தியில் உள்ள தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (33)

# பஃவ்ரல் அமைப்பு யாழ்.இல் நடத்திய தேர்தல் சட்டதிருத்தம் குறித்த கருத்தரங்கு

(நல்லூர்)

தேர்தல் சட்ட திருத்தங்கள் பற்றிய சிபார்சுகளை அறியவும் செயற்திட்டத்தை உருவாக்கு வதற்குமாக சுந்திரமாக நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (ப.'.வ்ரல்) அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் வை.எம்.சி.எ மண்டபத்தில் ப.'.வ்ரல் அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.நிர்மானுஜன் தலைமையில் இடம் பெற்றது.

தேர்தல் திருத்த சட்டங்கள் பற்றி ப.'.வ்ரல் அமைப்பின் தேசிய இணைப்பாளரும், திட்டமிடலாளருமான சட்டத்தரணி அஷித மென்டிஸ் மற்றும் யாழ்பபாணம் பல்கலைக்கழக அரசறிவியல் விரிவுரையாளர் கலாநிதி அ.ரகுநாதன் ஆகியோர் உரையாற்றினர்கள்.

மற்றும் யாழ்.மாவட்டதமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவஜிலிங்கம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தர் சி.மோகனதாஸ், யாழ்.மாவட்ட தேர்தல் உதவி ஆணையாளர் சி.குகநாதன் உட்பட மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதி நிதிகளும் கலந்து கொண்டனர்.

# சாட்டி,மாவீரர் துயிலுமில்லத்தில் வர்த்தகர்கள் மாணவர் சிரமதானம்

தமிழர் தாயகப்பிரதேசமெங்கும் உணர்வு பூர்வமாகக் கடைப் பிடிக்கப்படவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்.தீவகப் பகுதியில் உள்ள சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தீவக தேசிய எழுச்சிப் பேரவையினர் மாணவர்கள், பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலரும் அச்சிரமதானப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.அத்துடன் தீவகப் பிரதேசமெங்கும் மாவீரர் தினநிகழ்வுகளை அனுஷ்டிப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம் பெற்றுவருகின்றன. (33)

## -யாழ்.குடாநாட்டில்-

# இடைவிலகிய மாணவர்களை மீண்டும் இணைக்க யுனிசெப் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் உள்ள பாடசாலைகளில் இருந்து இடைவிலகிய மாணவர்களை மீண்டும் கல்வி நடவடிக்கைகளில் இணைப்பதற்கான புதிய தொரு செயற்றிட்டத்தை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் மேற்கொண்டுள்ளது.

சிறுவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியமைக்கான காரணங்கள் மற்றும் குடும்பப் பின்னணிகள் என்பவற்றை இனம் கண்டு அவற்றிற்கான நிவாரணங்களை வழங்குவதனை அடிப்படையாகக் கொண்டு அமைந்த இத்திட்டத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக வேண்டி ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் (UNICEF) பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக பாடசாலைகளை விட்டு இடைவிலகிய மாணவர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (33)

# அடிப்படை வசதியற்று இயங்கும் புங்குடுதீவு தபாலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.புங்குடுதீவு தபாலகம் அடிப்படை வசதிகள் எதுவும் அற்ற நிலையில் இயங்கி வருவதால் அப்பகுதி மக்கள் தமக்கான தபால் சேவையை திருப்திகரமாகப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. நீண்டகாலமாகத் தனக்கென ஒரு சொந்தக் கட்டடம் இன்றி தனியார் வீடொன்றில் இயங்கி வரும் மேற்படித் தபாலகத்திற்கு ஊழியர் பற்றாக் குறை தளபாடவசதிகள் பற்றாக்குறை, தொலைத் தொடர்புச் சேவையின்மை போன்ற பல்வேறு வசதியீனங்கள் காணப்படுகின்றது. இது குறித்துப் பலதரப்பினர்க்கும் முறைப்பாடு செய்துள்ள போதும் அவர்கள் இதற்கான மாற்று நடவடிக்கைகள் எதுவும் எடுக்காததால் தொடர்ந்தும் இந்த அடிப்படை வசதிகள் இன்றியே இயங்கி வருகின்றது. இதனால் இப்பகுதி மக்கள் தமக்குரிய தபால் தொலைத் தொடர்பு சேவையைக் திருப்திகரமாகப் பெறமுடியாத நிலை காணப்படுகிறது. (33)

# புனரமைக்கப்படாத நிலையில் கல்வியங்காடு–விளையாட்டரங்க வீதி

யாழ்.கல்வியங்காட்டு விளையாட்டு அரங்க வீதி நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் மோசமாக சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால் இவ் வீதியூடாக பயணிப்போர் பலத்த அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.இது குறித்து உரிய தரப்பினரிடம் முறையிட்டு நடவடிக்கை எடுக்கப்படாததையிட்டு மக்கள் விசனம்தெரிவித்துள்ளனர்.(33)

## மாந்தை மேற்கு பிரதேச செயலர் தெரிவிப்பு

# கடும் மழை காரணமாக பாதைகள் மோசமாகப் பாதிப்பு


மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மாந்தை மேற்குப்பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட போக்குவரத்துப் பாதைகள் சில மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக போக்குவரத்து மேற்கொள்வதில் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக கறுக்காக் குளம் வட்டக்கண்டல் வீதி,வட்டக் கண்டல் ஆண்டாங் குளம் வீதிகன்னாட்டி அடம்பன் வீதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக மேற்படி வீதியினைப் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருடன் மேற்கொண்டு ஏற்பட்டுள்ள சிரமத்தினைப் போக்க முன்வர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகை விடுத்துள்ளனர்.

# யாழ்.பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானக்கண்காட்சி

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி நடாத்தப்படும் கண்காட்சி முன்னை நாள் யாழ்-பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் நடாவை வெட்டித் திறந்துவைத்தார்.**


**(படப்பிடிப்பு சீலன்)**









# மூன்றாம் முறைசனாதிபதியாகும் கனவைவிட்டு பேச்சுவார்த்தைகளை சந்திரிகா ஆரம்பிக்க வேண்டும்

இலங்கையின் அரசியல் வரலாற்றில் தற்பொழுது மிக முக்கியமானதும், யாவரும் எதிர்பார்ப்பதும் சமாதானத்தை எவ்வாறு நிலைநாட்டுவது என்பதேயாகும். இது சம்பந்தமாக பல பிரச்சினைகள் உள்ளன. சமாதானத்தை நிலை நாட்டுவதும், பேச்சுவார்த்தைகளை எப்படி ஆரம்பிப்பது அதனால் ஏற்படும் பிரதி பலன்கள் என்ன என்பதே மிக முக்கியமான விடயமாகும். நாட்டில் ஆட்சி செய்த முன்னைய சனாதிபதிகள் இவற்றுக்குப் பல ஆலோசனைச் சபைகளை ஆரம்பித்தார்கள். அதனால் எந்தப் பலன்களும் ஏற்படவில்லை. நாட்டில் எதையும் அவர்களால் சாதிக்க முடியாமல் போயிற்று. நாட்டை ஆட்சி செய்த எந்த அரசியல் கட்சியும் தங்களின் அரசியல் இலாபம் கருதி இதனைப் பொருட்படுத்தவில்லை. இவர்களால் நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினைகளை இவ்வாறான ஆலோசனைச் சபைகள் மூலமாகத் தீர்த்து வைக்கும் நோக்கம் இவர்களுக்கு ஏற்படவில்லை. சமீபத்தில் சனாதிபதி அவர்கள் தான் அமைத்துள்ள ஆலோசனைச் சபையினால் நன்மைகள் என்ன என்பதை விளக்கமாக கூறியுள்ளார். அதாவது எல்லோரும் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்பட்டு ஒரு அரசை அமைப்பதே இதன் முழுநோக்கம் எனக் கூறியுள்ளார். வடகிழக்கையும் அதேபோல் தென் பகுதியையும் ஒன்றிணைத்து நாட்டின் பொருளாதாரத்தை மிக வேகமாகக் கட்டி எழுப்புவதே இந்தச் சமாதான சபையின் பிரதான நோக்கமாகும் எனவும் மேலும், வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் மிகச் சிக்கலான பிரச்சினைகளுக்கு அவர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொண்டு இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அவர்களுக்கு அரசினால் என்ன செய்யமுடியும் என்பதைப் பற்றி அவர்களோடு கலந்தாலோசிப்பதே இதன் பிரதான நோக்கம் என்று அவர் கூறியிருக்கிறார்.

இந்தத் தேசிய சமாதான சபை நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது? இதனால் ஏற்படப் போகும் சிக்கல்களுக்கு எப்படியான முடிவினை எடுக்கப் போகின்றது?

இந்தச் சமாதான சபையின் ஆரம்பத்தில் அரசியல் சொற்போர்களையே எம்மால் கேட்க முடிந்தது. எதிர்க்கட்சியினரின் அனுசரணை இந்தத் தேசிய சமாதான சபைக்குக் கிடைக்கவில்லை. மேலும் முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் கூட்டமைப்பின் ஆதரவும் கிடைக்கவில்லை. ஆகவே இந்த சமாதான சபை மாப்பிள்ளை இல்லாத திருமணத்திற்குச் சமமானதாகும். பிரதான எதிர்க்கட்சியின் உதவிகள் இல்லாமல் இந்த சமாதான சபையை நடத்த முடியாது. மேலும் மிக முக்கியமான விடயம் என்னவென்றால் ஐம்பது வருடகாலமாக நாட்டில் உள்ள பிரதான அரசியல் கட்சிகள் அரசியல் நிலைப்பாட்டுக்கு வராததே மிக முக்கியமான காரணமாகும்.



சந்திரிகா

நாட்டில் கொழுந்து விட்டெரியும் ஒரு முக்கியமான பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் சனாதிபதியால் ஏனைய கட்சிகளின் உதவிகளைப் பெற முடியாமல் போனது மிக முக்கியமென நான் கருதுகிறேன். இலங்கை அரசியல் வரலாற்றில் இது மிக கவலைக்கிடமான விடயமாகும். இது ஒருவரின் தோள் மேல் ஏறிக் கொண்டு சவாரி செய்வதாகும். இதில் ஒருவரும் வெல்ல மாட்டார்கள் இருவரும் படுதோல்வியைத் தழுவிக்கொள்வார்கள்.

ஐக்கிய தேசிய முன்னணியின் மூன்று அமைச்சுக்களைப் பறித்து பொதுத் தேர்தலை சந்திரிகா நடத்தினார். மேலும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள ஒரு பிரச்சினையை அரசியலாக்கி அதைத் தேர்தல் பிரசாரத்திற்கு சனாதிபதி மட்டும் கொண்டு வரவில்லை. அவருக்கு கட்சியின் மற்றவர்களின் அனுசரணையும் கிடைத்தது. அது மட்டுமல்ல, ஐக்கிய தேசிய முன்னணி செய்து கொண்டுள்ள போர் நிறுத்தம் சம்பந்தமாக தமக்கு ஒன்றும் தெரியாது என சனாதிபதி தேர்தல் பிரசாரங்களின் பொழுது கூறியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் அமைச்சரவையில் சனாதிபதிக்கு எந்த மரியாதையும் அவர்கள் கொடுக்கவில்லை. கைப்பையில் அதிசக்தி வாய்ந்த ஒலிநாடாவை வைத்துக்கொண்டு எல்லாவற்றையும் பதிவு செய்கிறார் போன்ற குற்றச்சாட்டுக்களையே அவர்கள் சனாதிபதி மீது சுமத்தினார்கள். இவை எல்லாம் ரணிலின் அரசைக் கலைப்பதற்கு முக்கிய காரணங்களாக விளங்கின. இதனால் சனாதிபதியும் ரணிலும் அரசியலில் கீரியும், பாம்புமாக மாறினார்கள், தற்பொழுதும் அவ்வாறே செயற்படுகின்றார்கள். உட்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாதவர்கள் எப்படித் தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் போகிறார்கள்.

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜயவர்த்தனா தேர்தல் பிரசாரத்தின் போது தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு, அதை நன்கு அறிவேன். நான் அதிகாரத்திற்கு வந்தால் சர்வகட்சி மகாநாட்டை அமைத்து அதன் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பேன் என்று கூறினார். 1977 ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பின் பிரதான எதிர்க்கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணி இருந்தது. பின் ஜே.ஆர். ஜயவர்த்தனா தமிழர்களுக்கு சமாதானமா? அல்லது யுத்தமா? தேவைப்படுகிறது. இரண்டையும் பெற்றுக் கொடுப்பதற்குத் தாம் தயார் என பாராளுமன்றத்தில் கூறினார். இது ஒரு நாட்டின் தலைவர் பேசும் பேச்சு அல்ல.


சர்வகட்சி மாநாட்டைக் கூட்டுவேன் என்று கூறியவர் 1984 ஆம் ஆண்டளவில் சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். எதிர்க்கட்சியிடமிருந்து அவருக்கு ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

சர்வகட்சி மாநாடு நடைபெறும் பொழுது கூட்டணி அபிவிருத்திச் சபைகளின் அதிகாரங்களை இவரிடம் கோரியது. தென்பகுதி அரசியல் தலைவர்கள் இவர்களின் கருத்துக்களைப் பிழையாகப் புரிந்து கொண்டமையால் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சர்வகட்சி மாநாட்டிலிருந்து விலக வேண்டி வந்தது. 1985 ஆம் ஆண்டும் மீண்டும் சர்வகட்சி மாநாடு கூடியபொழுது அது தோல்வி அடைந்தது.

1990 ஆண்டு அப்போதைய சனாதிபதி ஆர்.பிரேமதாச சர்வகட்சி மாநாட்டைக் கூட்டினார். அதில் விடுதலைப்புலிகளும் கலந்து கொண்டனர். அப்பேச்சு வார்த்தைகளும் தோல்வி கண்டது. கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசும் பல அமைப்புகளை ஏற்படுத்தியது. அவையும் தோல்வியையே தழுவின.

தற்பொழுது இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள தேசிய சமாதானச் சபை தென்னாபிரிக்காவில் நடை முறைப்படுத்தப்பட்ட தேசிய சமாதான சபைக்கு சமமானதென தற்பொழுது கூறப்படுகிறது. ஆனால் தென்னாபிரிக்காவில் நடைமுறைப்படுத்தப்பட்ட தேசிய சமாதான சபை பலம் வாய்ந்த கொள்கைகளுக்கு மரியாதை தரும் சபையாக அமைந்தது. 25 வருடங்கள் நெல்சன் மண்டேலா சிறைவாசம் அனுபவித்து விடுதலையாகி வந்த பின் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு சம்மதம் தெரிவித்தார். 300 வருடங்களுக்கு தென்னாபிரிக்காவின் மக்கள் அடிமை வாழ்க்கைக்கும், அதிகார வர்க்கத்திற்கும் எதிராகப் போராட்டம் நடத்தி, இரத்தம் சிந்தியவர்கள் என்று பலர் கருதினார்கள். நெல்சன் மண்டேலா தமது எதிராளிகளிடம் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். சமாதானம் சம்பந்தமாக அவர்களும் மனச்சாட்சியுடன் நடந்து கொண்டபடியால் அவரின் எதிரியான டிக்ளாகின் கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு மண்டேலாவின் சமாதான நடவடிக்கைகளுக்கு உடன்பட்ட படியால் இருவருக்கும் சமாதானத் திற்கான நோபல் பரிசு கிடைத்தது.

தென்னாபிரிக்காவில் தேசிய சமாதானச் சபை மூலம் சக்தி வாய்ந்த சமூகத்தை கட்டியெழுப்பி யதன் மூலம் இரண்டு சமூகங்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த பிணக்குகளையும் தீர்த்துக் கொள்வதற்கு இச் சபை உதவியது. பின் எல்லா அரசியல் கட்சிகளையும் இணைத்துக் கொண்டு அங்கு ஒரு சபை ஏற்படுத்தப்பட்டது. அந்தச் சபையில் சகலரின் பிரச்சினைகளும் விவாதிக்கப்பட்டன. அதற்கு சகல அரசியல் கட்சிகளுக்கும் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டன. பின் பொது மக்களும் இதில் இணைக்கப்பட்டனர். இதனால் தென்னாபிரிக்காவில் சக்தி வாய்ந்த ஒரு கட்டமைப்பு ஏற்பட்டது.



–ரில்வின் சில்வா

ஆகவே தென்னாபிரிக்க தேசிய சமாதானச் சபையை பற்றி நாங்கள் ஆராய்வோமானால் எமக்கு அநேக விடயங்களை எட்ட வேண்டியுள்ளது. எமது நாட்டில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்துவதானால் எதிர்க்கட்சியினரையும் ஏனைய அரசியல் கட்சிகளையும் சந்திரிகா இணைத்துக்கொள்ள வேண்டும். இதில் இனவாதிகளை இணைத்து கொள்ளலாகாது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சனாதிபதிக்கு பூரண அதிகாரங்கள் உண்டு. இரண்டு கட்சிகளும் சமஷ்டி ஆட்சி முறையையே விரும்புகின்றன. முன்பு ஜே.வி.பியினர், நோர்வே சமாதானத் தூதுவரை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். ஆனால் இப்பொழுது ஜே.வி.பி யினர் இலங்கை நோர்வேக் கிணற்றில் வீழ்ந்துள்ள படியால் நோர்வேக் கிணறு வாயிலாகவே வரவேண்டும் எனக் கூறுகின்றனர். ஆகவே தமிழர்களின் ஏகபிரதிநிதி விடுதலைப்புலிகள் என்பதை ஜே.வி.பி ஏற்றுக் கொண்டுள்ளது. அதிகாரப் பரவலாக்கலை அது ஏற்றுக் கொண்டுள்ளது. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் சனாதிபதி அவர்கள் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும். இப்பேச்சுவார்த்தைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி முழு ஆதரவையும் வழங்கப் போவதாக கூறுகின்றது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் பேச்சுவார்த்தைகளில் இருக்கும் இடைவெளி மிகக் குறுகியதாகும். ஆகவே இப் பேச்சு வார்த்தைகளின் பொழுது சமாதான முன்னெடுப்புகளில் பாரிய மாற்றங்கள் ஏற்பட இடமுண்டு. இந்தச் சமாதான சபை சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டுமா?இல்லையா? என்பதைத் தீர்மானிக்க முடியும்.

ஆனால் சனாதிபதியின் நிலைப்பாடு சிக்கலாக உள்ளது. ஒரு புறம் சமாதானப் பேச்சுவார்தைகளை நடத்தி வெற்றி காண வேண்டும் . மறுபுறம் மூன்றாம் முறையும் மக்களின் வரத்தை பெற வேண்டும். இந்த இரண்டும் அவருக்கு ஏற்படப் போகும் பெரும் சவாலாக உள்ளது. அதனால் ஜே.வி.பியின் ஆதரவு முக்கியமாக சனாதிபதிக்குத் தேவைப்படுகின்றது. நாட்டின் உயர் பதவியை வகிக்கும் சனாதிபதி தனது அரசின் தலைமைப் பதவியையோ, எதிர்க்கட்சி தலைமைப் பதவியையோ ஏற்றுக் கொள்ள முடியாது. இவைகள் எல்லாவற்றையும் மூட்டைகட்டி புறம்பாக வைத்துவிட்டுச் சமாதான நடவடிக்கையில் முழுமையாக ஈடுபட வேண்டும்.

மூன்றாவது தடவையாக மக்கள் ஆணையைப் பெற வேண்டுமானால் இந்த சமாதானப் பேச்சு வார்த்தைகளை வெற்றிகரமாக முடிக்க வேண்டும். இது குறித்து இன்றோ அல்லது நாளையோ சனாதிபதி முடிவெடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையை மீண்டும் தள்ளிப் போட்டால் அது சனாதிபதிக்கு ஆபத்தாக முடியும்.

*லங்காதீப சிங்களநாளிதழ்*
*பேராசிரியர்குமார் ரூபசிங்க.*
*மொழியாக்கம். அ. சக்திவேல்*


# நல்லநூல்களைத்தேடி வாசித்து உலகை ஆள்பவர்களாவோம்

சிந்திக்க சிரிக்கத் தெரிந்த விலங்கு மனிதன் என்பார்கள், மனிதப் படைப்பின் மகத்துவமே அதுதான். மனிதன் தன் ஆறாவது அறிவான பகுத்தறிவைக் கொண்டு உலகைத் தன்வசப்படுத்திவரும் தற்போதைய நவீன யுகத்தின் வளர்ச்சிப் போக்கில் மனிதனின் அறிவுத்துறை சார்ந்த வாசிப்பு சம்பந்தமாக இன்றைய நாளில் சில விடயங்களை ஆராயவேண்டும். ஏனெனில் இன்று உலக நூலக தினமாகும்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பதற்கமைய நூல்களே ஒருவனை முழு மனிதனாக்குகிறது. வாசிக்கும் பழக்கம், திறன் எம் அனைவரிடமும் வளரவேண்டும் உலகம் தகவல்களால் ஆளப்படுகின்றது. தகவல்களை யார் கூடுதலாகக் கொண்டுள்ளார்களோ அவர்களே உலகை ஆள்பவர்களாக உள்ளனர்.

மாணவர்களின் தற்போதைய புதிய பாடத்திட்டமானது தேடலை குறிக்கோளாகக் கொண்டது. ஆனால் தற்போது எமது மாணவிகளுக்கு இச் சந்தர்ப்பம் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. காரணம்

இருந்தும் இந்த வாய்ப்பு அனைவரையும் எட்டக்கூடிய வாய்ப்பாக அமையவில்லை என்பதே வருத்தத்திற்குரிய உண்மை குறிப்பாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிலும்,அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் கூட குறிப்பிட்ட சிலருக்கே



எட்டக் கூடிய தான சிறந்த வாய்ப்பு சாதரரண மக்களுக்கு எட்டாக் கனியாக இருப்பது வேதனைக்குரியது. இந்த நிலையில் தான் அறிவுப் பொக்கிசங்களான நூலகங்களின் தேவை இன்னும் எமக்குத் தேவையான ஒன்றாகவே இருக்கிறது. இது எப்போது எம் நாட்டில் பூரண வளர்ச்சியடையும் என்பதே அனைவரது

நூல்களை வாசிப்பதற்கு, அப்பழக்கம் ஏற்படுவதற்கு இன்று பெறும் தடையாக இருக்கும் காரணிகளில் ஒன்றாக பல பிரதேசங்களில் தொலைக்காட்சி இருக்கின்றமையும் மறுக்கமுடியாத ஒன்றே. ஆனால் அது அறிவை வளர்க்கக் கூடிய வலிமையான சாதனமும்தான். ஆனால்

வற்றை கற்கவேண்டும்" "கற்பவையை கசடறக்கற்று" அதன்படி ஒழுகவேண்டும்.

உலகிலேயே மிகப் பெரிய நூலகமாக அமெரிக்காவிலுள்ள காங்கிரஸ் நூலகம் திகழ்கிறது. இதேவேளை ஆசியாவிலேயே மிகவும் சிறந்த நூலகமும் பழமை வாய்ந்த துமாக இருந்த யாழ்.பொது நூலகம் 1981ஆம் ஆண்டு சிங்களப் பேரினவாதி களால் திட்டமிட்டு எரித்து அழிக்கப்பட்டது. இந் நூலகம் தமிழர்களின் வரலாறு களையும் கல்வெட்டுக்களையும் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சில காலமாக பாடசாலை நூலக அபிவிருத்தி கருத்தில் எடுக்கப்படாமல் மாணவர்களிடையே தனியாக பாடப்புத்தகங்களை கற்கும் நிலை காணப்பட்டது. தற்போது இது சிறு மாற்றம் அடைந்து பாடசாலை நூலக அபிவிருத்தி நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் நகர்ப்புற பாடசாலைகளில் இது வளர்ச்சியடைந்த நிலையில், கிராமப்புறப் பாடசாலைகளில் குறிப்பாக வட-கிழக்கு பாடசாலைகளில் இது ஓரம்கட்டப்பட்ட

பாடசாலைகளில் நூலகங்கள் மிகவும் குறைவாக உள்ளன. அப்படி நூலகங்கள் இருந்தாலும் போதியளவான நூல்கள் இல்லை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் நூலகம் சார்ந்தது என்பதற்கு அப்பால் அறிவியல் தொழில் நுட்பத்தின் பயனாக தற்போது உலகின் கரங்களில் தவழும் இணையத்தளங்கள் உலகின் பல்துறை சார்ந்த நூல்களாக இயங்கி வருவதுடன் ஒரு நொடிப்பொழுதில் உரிய தகவல்களைக் கொண்டு வந்து சேர்க்கும் அற்புத சாதனமாக பரிணமித்து இருப்பது அனைவரையும் வசப்படுத்தும் என்பதில் தவறில்லை.

எதிர்பார்ப்பாக உள்ளது.

அறிவுப் பசி தீர்க்கும் அரும் பொக்கிசமான நூல்களை வாசித்து அவற்றின் மூலம் பயன்பெற வேண்டும். இன்றைய நவீன உலகில் இயந்திரமயமான வாழ்க்கைப் போக்கில் மனிதனிற்கு ஓய்வு என்பது கிடைத்தற்கரிய ஒன்றாகிவிட்டதனால் நூலகங்களில்

இருந்து வாசிப்பதற்குரிய நேரம் கிடைப்பதில். பெரும் சிக்கல்கள் தோன்றி உள்ளன இதனால் உலகளாவிய ரீதியில் வாசிப்பு என்பது அரிதாகி வருவதை ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தொலைக்காட்சி பயன்படுத்தப்படும் முறையானது பெரும்பாலும் அறிவை வளர்ப்பதற்கானது என்று சொல்லிவிட முடியாதுள்ளது.

பாடசாலை நூலகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடனும், பாடசாலைக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்குடனுமே பாடசாலை நூலக வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது.

"பாலையும், தண்ணீரையும் கலந்து வைக்கின்ற வேளை அன்னமானது தண்ணீரை நீக்கி பாலை மட்டும் எவ்வாறு அருந்துகின்றதோ" அதேபோன்று நல்லன

நிலையில் காணப்படுகிறது. இதனால் எமது மாணவர்களிடையே வாசித்தல், தேடல் என்பன அரிதாகிக் காணப்படுகிறது. ஆயினும் கிடைக்கின்ற நூல்களை நன்றாகக் கற்பதுடன் கற்கும் நூல்களைப் பேணிப் பாதுகாக்கவேண்டும்.

**த. ரேணுகா**

"கண்டதையும் கற்றவன் பண்டிதன் ஆவான்" என்பதற்கமைய மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் பல நல்ல நூல்களைக் கற்று வளர்ச்சிப் பாதையை நோக்கிப் பயணிப்போமாக.

---

## ஹெல உறுமய கட்சி குறித்து தம்மாலோக தேரர் மீண்டும் விமர்சனம்

### கட்சிக்குள் மீண்டும் முரண்பாடு

பௌத்த பீடங்கள் தலையிட்டுத் தீர்த்து வைத்ததாக நம்பப்பட்ட ஹெல உறுமய கட்சிக்குள் எழுந்த குழப் பங்கள், மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்துள்ளன.

ஏற்கனவே சிஹல உறுமய கட்சியில் அங்கம் வகித்த அங்கத்தவர்கள் அத்தனை பேரும் ஹெல உறுமய கட்சியிலிருந்து விலக வேண்டுமென வண.தம்மாலோக தேரர் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்தார்.அதியுயர் பீடத்தினருடன் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து, குழப்பங்கள் நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், வண. கொலன்னாவ சுமங்கல தேரரின் கருத்துக்களை ஏற்க வண.தம்மாலோக தேரர் மறுத்து விட்டார் என்றும், தன்னைக் கொலை செய்ய ஹெல உறுமய அங்கத்தவர் சிலர் முயற்சித்து வருவதாக மீண்டும் குற்றம் சாட்டியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.பொது ஊடகங்களிடம் கட்சி குறித்த தேவையற்ற கருத்துக்களைக் கூறவேண்டாமென அதியுயர் பௌத்த பீடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும், வண.தம்மாலோக தேரர் மீண்டும் ஹெல உறுமய கட்சி உறுப்பினர்களுடன் விவாதங்களில் ஈடுபட்டதுடன், ஊடகங்களுக்கும் ஹெல உறுமய குறித்த பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

## பாராளுமன்றில் பார்வையாளரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்த முடிவு

(கொழும்பு)

பாராளுமன்றக் கூட்டத் தொடர்கள் நடைபெறும் தினங்களில் உறுப்பினர்களால் அழைத்துவரப்படும் பார்வையாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படவுள்ளது.

சபாநாயகர் டபிள்யூ.ஜே. எம்.லொக்குபண்டார தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற உள்விவகார தெரிவுக்குழுக் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்டுப்பாடற்ற அளவில் விருந்தினர்களை அழைத்துச் செல்வதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

வரவுசெலவுத்திட்டம் மீதான பாராளுமன்ற விவாதத்தின் போதும் அமைச்சர்களின் சார்பில் 25 அதிகாரிகள் மாத்திரமே கலந்துகொள்ள முடியுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை பாராளுமன்ற வளாகத்தில் வணக்கஸ்தலங்களை நிறுவுவதற்கும் இந்தக் கூட்டத் தின்போது தீர்மானிக்கப்பட்டது. இதன்படி பௌத்த, இந்து, கிறிஸ்தவ இஸ்லாமிய வணக்கஸ் தலங்களும் அமைக்கப்படவுள்ளன.

## 6ஆம் ஆண்டு மாணவர்களுக்கு ஆபாசப்படம் காண்பித்த அதிபர்

மொரட்டுவ வேல்ஸ் குமார மாவத்த சிங்கள மகாவித்தியாலயத்தில் 6ஆம் வகுப்புப் பயிலும் மாணவர்களுக்கு சீ.டி.மூலமாக ஆபாசப் படங்கள் காண்பிக்கப்பட்டதாக அக்கல்லூரி அதிபர் எஸ்.ஜே.பி. விஜேயசிங்க இம்மாதம் 24ஆம் திகதி பள்ளிக்கடை அபிவிருத்திச் சங்கத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். இப்படங்களைக் காண்பிப்பதற்கு உயர்தர வகுப்புப் பயிலும் மாணவர்களின் அனுசரணை பெறப்பட்டுள்ளதாக அக்கூட்டத்தில் அதிபர் ஒப்புக்கொண்டுள்ளார்.

## கேகாலையில் பாடசாலை ஒன்று மின்னலுக்கஞ்சி மூடப்பட்டது

(கொழும்பு)

இடிமின்னல் தாக்குதல் அச்சம் காரணமாக பாடசாலையொன்று தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கேகாலை மாவட்டத்திலுள்ள தெவலகம கனிஷ்ட வித்தியாலயமே இவ்வாறு மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

33000 வோல்ற் மின்னழுத்தம் கொண்ட மின்மாற்றியொன்று பாடசாலைசெயற்பாட்டிற்கு இடையூறாகப் பாடசாலை வளாகத்தில் அமைந்திருப்பதாகவும்.

இதன் இணைப்புக்கம்பிகள் (வயர்கள்) சேதமடைந்திருப்பதால் மின்னல் ஏற்படும் சமயங்களில் மாணவர்களுக்கு பாரிய ஆபத்து ஏற்படும் வாய்ப்பு இருப்பதாகவும் இதனாலேயே அக்காலப்பகுதியில் பாடசாலையை முடவேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் குறித்த மின்மாற்றியை வேறிடத்திற்கு மாற்றுமாறு கோரிய போதிலும் எந்த வித நடவடிக்கையையும் எடுக்கப்படவில்லையெனவும்.

இதனால் மழை நாட்களில் மாணவர்கள் ஆபத்துக்கருதி வீட்டிற்கு அனுப்பப்படுகின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## 12 மில். ரூபா போதைப் பொருளை சுங்கப்பகுதியினர் கைப்பற்றினர்

(கொழும்பு)

சுமார் பன்னிரெண்டு மில்லியன் ரூபாய்கள் பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை நாட்டிற்குள் கடத்திவர முயன்ற பாகிஸ்தானிய பிரஜை ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை பாகிஸ்தான் கராச்சியில் இருந்து விமானத்தில் வந்திறங்கிய இந்த நபரை சோதனையிட்ட சுங்க அதிகாரிகள் அவரது பயணப்பையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மூன்று கிலோ 'பிறவுண்சுகர்' ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றியுள்ளனர்.

சுங்க உதவி அத்தியட்சகர் ரீ.சிவபாலன் தலைமையிலான குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறனர்.

# தனியார் சுதந்திர ஊடகங்கள் கூறும் பொய்களை நம்ப வேண்டாம்

## -சுசில்பிறேம ஜெயந் தெரிவிப்பு

தனியார் சுதந்திர ஊடகங்கள் கூறும் பொய்களை நம்பவேண்டாம. இவற்றிற்குப் பதிலளிக்கும் வேலையையும் நாங்கள் நிறுத்தியுள்ளோமென ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளர் சுசில் பிறேமஜெயந் கூறியுள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியும், சனாதிபதியும் ஒவ்வொரு நாளும் மோதிக் கொள்கிறார்கள், சண்டையிட்டுக் கொள்கிறார்கள் எனப் பத்திரிகைகளில் கூறுவார்கள். அவ்வாறான ஒன்றும் நடைபெறவில்லை. அதில் ஒருவார்த்தைகூட உண்மையில்லை என்றார் அவர்.

இதேவேளை நிறைவேற்று அதிகாரமும் பாராளுமன்றமும் ஒரே அரசியல் கட்சியின் வழி நடத்தலில் இருந்தால் மட்டுமே நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் கூறினார்.

முன்னைய ஆட்சிக்காலத்தில் ரவிகருணாநாயக்க பகிடிவதைகளையும் மற்றும் வாகனப் பிரச்சினைகளையும் சனாதிபதி மேல் சுமத்தி அவரை நிலை குலையச் செய்தார். இதனால் சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் மழுங்கடிக்கப்பட்டது.

அரசியல் சாசனத்தின்படி நிறைவேற்று அதிகாரம் கிடைத்துள்ளதாகச் சிலர் கருதுகிறார்கள். ஆனால் அந்த அதிகாரத்தை அவரால் பயன்படுத்த முடியாதிருந்தது. அந்த அதிகாரத்திற்கு உயிர் கொடுக்க முடியாதிருந்தார். அப்போது அவர் ஐம்பது சதத்திற்கும் பெறுமதியற்றவராக இருந்தார் என்றார் அவர்.

# படையினர் போன்று உடை அணிந்தோரே பல கொள்ளைகளில் ஈடுபடுகின்றனர்

(கொழும்பு)

படையினரைப் போன்று உடையணிபவர்களாலேயே கொழும்பைச் சுற்றிலும் அதிக கொள்ளைச் சம்பவங்கள் நடைபெறுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர். பொலிசார் மற்றும் இராணுவத்தினரின் சீருடையை ஒத்ததான உடைகளை அணிந்தவர்களாலேயே அதிக எண்ணிக்கையிலான கொள்ளைகள் இடம்பெறுவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தகைய குற்றத்தை தடுப்பதற்கான விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், இராணுவத்தினரின் உதவியுடன் இராணுவப் பாதுகாப்பு வாகனங்களும் சோதனையிடப்படவுள்ளதாகவும், பொலிஸ் தலைமையக குற்றப்பிரிவு பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வாரத்தில் மட்டும் நாட்டில் குறித்த வகையிலான ஏழு கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தேசிய ஆலோசனைச் சபை உப குழுக்களின் கூட்டம்

சனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபையின் இரண்டு உபசபைகளின் கூட்டங்கள் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ளன. இதில் சமய சம்பந்தமான கூட்டம் நவம்பர் 2 ஆம் திகதியும், சிவில் அமைப்புகளின் கூட்டம் நவம்பர் 4ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இதேவேளை இந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் தீர்மானங்கள் அடுத்துவரும் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. கடந்த 4 ஆம் திகதி சனாதிபதியின் தலைமையில் இந்த ஆலோசனைச் சபைக்கூட்டத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் இடம் பெற்றது. இதில் ஐக்கிய தேசிய கட்சி உட்பட்ட முக்கிய கட்சிகள் பங்கேற்கவில்லை. (32)

# செயற்கை உறுப்புப் பொருத்தும் நிலையம் மன்னாரில் திறப்பு

(மன்னார்)

யுத்த காலங்களில் அவயவங்களை இழந்தவர்களின் நலன் கருதி செயற்கை உறுப்புக்கள் பொருத்தும் முகமாக மன்னார் வாழ்வோதயத்தினால் உதவிக் கரம் வழங்கல் என்ற நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தை கடந்த 19ஆம் திகதி யுனிசெப்நிறுவன அதிபாரி ஜே.கே.கமீட் அவர்கள் திறந்துவைத்ததுடன் மன்னார் வாழ்வோதயத்தின் பணிகளைப் பாராட்டியும் பேசினார். இந்நிகழ்விற்கு மன்னார் வாழ்வோதய இயக்குநர் அருட் தந்தை ஜேசுராஜா தலைமைதாங்கினார். மன்னார் அதிவண.ஆயர் இராயப்பு யோசப்பு ஆண்டகை அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இவ்வைபவத்தில் புதிதாக ஒருவருக்கு செயற்கைக்கால் பொருத்தியதுடன் மற்றொருவருக்கு முச்சக்கரவண்டியும் மேலும் இருவருக்கு ஊன்றுகோலும் வழங்கப்பட்டுள்ளன. (மி)

# உபதபாலகம் உடைத்து ரூபா.15 கொள்ளை

## -கலேவெலவில் சம்பவம்

(கொழும்பு)

உபதபால் நிலையம் ஒன்றை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த வெறும் பதினைந்து ரூபாவை மட்டுமே களவாடிச் சென்றனர்.

சில தினங்களுக்கு முன் இரவில் கலேவெல உபதபாலகத்தை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெட்டகத்தை உடைப் பதில் தோல்வியடைந்ததையடுத்து மேசையின் மீதிருந்த பதினைந்து ரூபாவை மட்டுமே களவாடிச் சென்றுள்ளனர்.

இத் திருடர் குழு பின்னர் இத்தபாலகத்திற்கு அண்மையில் உள்ள புடவைக் கடையொன்றை உடைத்து சுமார் 30,000 ரூபா பெறுமதியான சேலைகளை களவாடிச் சென்றிருப்பதாக கலேவெலப் பொலிசார் கூறியுள்ளனர்.

# சனாதிபதி சந்திரிகா இவ்வாரம் இந். செல்வார்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிகா இந்திய அரசாங்கத்தின் அழைப்பை ஏற்று இவ்வார இறுதியில் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார். இவ் விஜயத்தின் பொழுது சனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகி யோருடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு தீர்மானித்துள்ளார்.

# முன்னாள் குருமுதல்வர் மரணம்

முன்னாள் யாழ்.மறை மாவட்ட குரு முதல்வராக மிகச் சிறப்பாகப் பணியாற்றிய அருட்திரு மைக்கல் சாமி அவர்கள் கடந்த சனிக் கிழமை கொழும்புத்துறை குருக்கள் தங்கு மடத்தில் காலமானார். யாழ்.கத்தோலிக்க சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்பட்டது

# கொலைக் குற்றச்சாட்டில் ஐவருக்கு மரணதண்டனை


(கொழும்பு)

காலி ஹீன்பந்துல வேறாலினவத்த பகுதியில் கீர்த்தி குணசேகர என்பவரை வெட்டிக் கொலை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டில் விசாரிக்கப்பட்டு வந்த ஐந்து பேருக்கு காலி மேன்முறையீட்டு நீதிமன்றம் மரணதண்டனை விதித்துள்ளது. இந்தக்கொலைச்சம்பவம் 1997ஆம் ஆண்டு யூலை மாதம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வீரவணக்கம்

03ஆம் ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 08 □ 04 □ 1982



தாயக மண்ணில் 28 □ 10 □ 2001

**சண்முகம் -வசந்தன்**

**நி.மு மன்னார் மாவட்டம்**
**த.மு.வட்டக்கண்டல் பாலப்பெருமாள் கட்டை**
**மன்னார்**

21.10.2001 அன்று மணலாறு பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான எதிர்பாராத மோதலின் போது வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறை சிறப்புப்படையணியினர்"

(5225)

## வீரவணக்கம்

05 ஆண்டு நினைவலைகளில்

தாயின் மடியில் 31 07 1976



தாயக மண்ணில் 28 10 1999

**தமிழீழ காவல்துறை தலைமைக்காவலர்**
**தெய்வேந்திரன் நகுலேஸ்வரன்**

**தெய்வேந்திரன் நகுலேஸ்வரன்**
**நி.மு யாழ் மாவட்டம்.**
**த.மு மக்கள் வங்கி ஒழுங்கை தருமபுரம்**
**விசுவமடு**

28.10.1999 அன்று அம்பகாமம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலின் போது வீரச்சாவடைந்தார் இம் மாவீரருக்கும் இந் நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"தமிழீழ காவல் துறையினர்"

(.5224)

## மூன்றாம் ஆண்டு நினைவில்

தாய் மகிழ 04 □ 04 □ 1936



தாய்மண் நெகிழ 28 □ 10 □ 2001

**நாட்டுப்பற்றாளர் கணபதிப்பிள்ளைகந்தசாமி (வோயர்)**

[சமூகசேவையாளரும் தருமபுரம் சி.க.கூ.ச.முன்னாள் தலைவர்]

புற்றீசல் போல
புறப்பட்ட அமைப்புக்களிடையே
புனிதம் ஆய்ந்தன்றே
புலி வழி நடந்தீர்

செட்டைக்குள் குஞ்சு காக்கும்
தாய்க் கோழி போல-பகை
வேட்டைனின்றும் -ஈழப்புலி
வீரர் காத்த ஐயா

ஊருக்காக தினம் உழைத்த
உத்தமரே ஐயா
வான்பூமி உள்ளனவும்
வாழும் உன் நாமம்

**தருமபுரம் மற்றும்,**
**விசுவமடு பிரதேச மக்கள்.**

(சி.10701)

**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)

# மராட்டிய முதல்வர் பதவி காங்கிரசிற்கு

# தேசியவாத காங்.இற்கு 2 துணைமுதல்வர் பதவி

## 11 நாட்கள் இருந்த இழுபறிக்கு முடிவு

(புதுடில்லி)

**மராட்டிய மாநிலத்தில் 11 நாட்களாக நீடித்த இழுபறி நிலைக்குத் தீர்வு காணப்பட்டது. காங்கிரசிற்கு முதல்வர் பதவி என்றும், தேசியவாத காங்கிரசிற்கு 2 துணை முதல்வர் பதவி என்றும் உடன்பாடு ஏற்பட்டதாக உயர் மட்டத் தகவல் கூறுகிறது.**

மராட்டிய சட்டசபைத் தேர்தல் முடிவு வெளியாகி 11 நாட்களாகியும் வெற்றி பெற்ற காங்கிரஸ்-தேசியவாதக் காங்கிரஸ் கூட்டணி ஆட்சி அமைக்க முடியாமல் தடுமாறிக்கொண்டிருந்தது. முதல்வர் பதவி எந்தக்கட்சிக்கு என்று இழுபறி நிலவியது. அதிக இடங்களில் வெற்றி பெற்ற எங்களுக்குத் தான் முதல்வர் பதவி என்று தேசியவாதக் காங்கிரஸ் கட்சியும், காங்கிரஸ் முதல்வர் தலைமையிலான கட்சியும், காங்கிரஸ் ஆட்சியின் சாதனையை கூறித்தான் வெற்றி பெற்றோம். அதனால் முதல்வர் பதவி எங்களுக்குத் தான் என்று காங்கிரஸ் கட்சியும் கூறிவந்தது. முதல்வர் பதவி யாருக்கு என்பது தொடர்பாக காங்கிரஸ் தலைவி சோனியாவுக்கும் தேசியவாதக் காங்கிரஸ் தலைவர் சரத்பவாருக்கும் இடையே நடந்த பேச்சுவார்த்தை முன்னர் தோல்வி அடைந்தது. அதைத் தொடர்ந்து இரு தரப்பினாலும் பல்வேறு சமரசத திட்டங்கள் தெரிவிக்கப்பட்டு இரண்டாம் நிலைத் தலைவர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்தது. இறுதியாக முதல்வர் பதவிக்குப் பதிலாக தேசியவாத காங்கிரசிற்குத் துணை முதல்வர் பதவியோடு மூன்று கூடுதல் மந்திரிப் பதவி மற்றும் 2 முக்கிய இலாகாக்களைத தர காங்கிரஸ் முன்வைத்தது. அந்தத் திட்டத்திற்குத் தேசியவாதக் காங்கிரஸ் தரப்பில் இதுவரை திட்டவட்டமான பதில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்தத் திட்டத்திற்கு மாறாக தேசியவாதக் காங்கிரஸ் ஒரு திட்டத்தைத் தெரிவித்துள் ளது. துணை முதல்வர் பதவி காங்கிரசிற்கு வேண்டுமானால் தேசியவாதக் காங்கிரசிற்கு இரண்டு துணை முதல்வர்கள் பதவி தர வேண்டும் என்று கூறி உள்ளது. இந்தத் திட்டம் பற்றி சோனியா காந்தியிடம் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அவர் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களின் கருத்தைக் கேட்கும்படி கூறினார். காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் ஏற்கனவே எங்கள் முடிவிற்கு விட்டு விட்டார்கள். நீங்கள் தான் முடிவெடுக்க வேண்டும் என்று சோனியாவிடம் காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள். காங்கிரஸ் தரப்பில் மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் தேசியவாத காங்கிரஸ் தரப்பில் அதன் பொதுச் செயலரும், மத்திய அமைச்சருமான பிரகுல் பட்டேலும் இந்தப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு காங்கிரசிற்கு முதல்வா பதவி என்றும் தேசியவாத காங்கிரசிற்கு இரண்டு துணைமுதல்வர் பதவி என்றும் உடன்பாடு ஏற்பட்டிருப்பதாக உயா மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

# இந்தியர்களின் ஆதரவைப்பெற அமெரிக்க கட்சிகள் போட்டி

(வோஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தலில் இந்தியர்களின் ஆதரவைத் தேடுவதில் குடியரசுக்கட்சியும் சனநாயகக் கட்சியும் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றன.

அமெரிக்காவில் 19 இலட்சம் இந்தியர்கள் வசிக்கின்றனர். அவர்களில் பலர் பெரிய நிறுவனங்களின் முக்கிய நிர்வாகிகளாகவும், டாக்டர்கள், வர்த்தகப் பிரமுகர்களாகவும் இருக்கின்றனர். 40 ஆயிரம் இந்திய டாக்டர்கள் அமெரிக்காவில் உள்ளனர். கல்வி, மருத்துவம், பொருளாதார பலத்தில் இந்தியர்கள் செல்வாக்குடன் உள்ளனர். அமெரிக்காவில் வசிக்கும் ஆசியர்களில் மூன்றாவது இடத்தை இந்தியர்கள் பிடித்துள்ளனர். முதலிடத்தில் சீனாவும், இரண்டாமிடத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டவரும் உள்ளனர். இருப்பினும் பொருளாதாரப் பலம், செல்வாக்கில் இந்தியர்கள் முதலிடத்தில் இருக்கின்றனர். இந்தியர்களின் சராசரி ஆண்டு வருமானம் ரூபா 28 இலட்சத்து 80 ஆயிரம். ரூபா. இது அமெரிக்கரின் சராசரி ஆண்டு வருமானத்தைப் போல இருமடங்கு. அங்கு வசிக்கும் 10 இந்தியர்களில் ஒருவர் கோடீஸ்வரராக இருக்கிறார். புளோரிடா மாகாணத்தில் வசிக்கும் இருதய நோய் சிகிச்சை நிபுணர் ஒருவர் அதிபர் ஜோர்ஜ்புஷ்சிற்கு ரூபாய் 100 கோடி தேர்தல் நிதி திரட்டிக்கொடுத்தார். அமெரிக்க அதிபர் தேர்தல் நவம்பர் இரண்டில் நடக்கிறது. அதற்கு இந்தியர்களின் ஆதரவைத் திரட்டுவதில் சனநாயகக் கட்சி, குடியரசுக்கட்சி, ஆகிய இரு முக்கிய கட்சிகளும் மும்முரமாக உள்ளன. பெரும்பாலான இந்தியர்கள் சனநாயகக் கட்சி ஆதரவாளர்களாக இருக்கின்றனர்.

அமெரிக்காவில் வசிக்கும் இந்தியருக்கு குடியுரிமை பிரச்சினை, இந்தியாவுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதைத் தடுப்பது கூடுதல் சிவில் உரிமைகளை நிலைநாட்டுவது, இனப்பாகுபாட்டை நீக்குவது ஆகிய முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. பொருளாதாரப் பலம் செல்வாக்கு நிறைந்து இருந்தாலும், அமெரிக்க அரசியலில் இந்தியர்களின் ஆர்வம குறைவாகவே இருக்கின்றது. கடந்த தேர்தலில் 57.1 சதவீத இந்தியர்கள் மட்டுமே ஓட்டு உரிமை கேட்டனர். அதில் 44.8 சதவீதம் இந்தியர்கள் மட்டுமே வாக்களித்தனர். அங்கு வசிக்கும் கோபால் ராஜு கூறுகையில் அரசியல் போட்டியில் இந்தியர்கள் ஆர்வமாகக் களம் இறங்குவது இல்லை என்றார்.

# பா.ஜனதாக் கட்சி அலுவலகத்தில் அதிரடி மாற்றம் கட்சித் தலைவர்களின் கட்-அவுட்டுகள் அகற்றப்பட்டன

டில்லியில் பா.ஜனதாக் கட்சி அலுவலகத்தில் இருந்த கட்சித் தலைவர்களின் 'கட்-அவுட்டுகள் அகற்றப்பட்டன. அகில இந்திய பா.ஜனதாத்தலைவர் பதவியில் இருந்த வெங்கையா நாயுடு விலகியதைத் தொடர்ந்து எஸ்.கே. அத்வானி தலைவர் பொறுப்பை ஏற்றார்.

ஏற்கனவே இருமுறை அத்வானி தலைவராக இருந்த காலத்தில்தான் பா.ஜனதா ஆட்சி வேகமான வளர்ச்சியைப் பெற்றது. தற்போது மீண்டும் அவர் தலைவர் பதவியை ஏற்றிருப்பது தொண்டர்கள் மத்தியில் உற்சாகத்தை ஏற்படுத்தும் என கட்சி மேலிடம் நம்புகிறது.

டில்லியில் உள்ள கட்சி அலுவலகத்திலும் அதிரடி மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பா.ஜனதாக் கட்சிஅலுவலகத்துக்கு முன்பு முன்னாள் பிரதமர் வாஜ்பாய், அத்வானி, வெங்கையா நாயுடு ஆகியோரது 'கட்-அவுட்'டுகள் வைக்கப்பட்டிருந்தன. அவை தற்போது அகற்றப்பட்டுவிட்டன.

இதன் மூலம் கட்சி அமைப்புக்கே முக்கியத்துவம் உண்டு. தனிநபருக்கு அல்ல என்ற தத்துவம் வெளியாகி இருக்கிறது. அது மட்டுமல்ல அத்வானி சமீபகாலமாக 'தேசம் முதன்மை' என்ற கொள்கையை அடிப்படையாக வைத்தே பேசி வருகிறார்.

பா.ஜனதா கட்சியின் தேசிய நிர்வாகக் குழுக்கூட்டம் டில்லியில் நேற்றுக் கூட்டப்பட்டது இந்தக் கூட்டத்தில் புதிய தலைவர் அத்வானி நியமனத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

# நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான போலி ரயில் பயணச் சீட்டுக்கள் பறிமுதல்

அகமதாபாத்தில் உள்ள 'சாதனையாளர் கிளப்' என்றவிடுதியில் சட்டத்துக்குப் புறம்பாக ரயில்டிக்கெட்டுகளை பதுக்கிவைத்திருப்பதாக பொலிசிற்கு தகவல் கிடைத்தது. மேற்கு ரயில்வேயின் குற்றப்பிரிவு பொலிசார், மும்பையில் உள்ள ரயில்வே வணிகப் பிரிவு அதிகாரிகள், ரயில்வே பொலீஸ் சூப்பிரண்டு கெலாட் தலைமையில் அங்கு சென்று அதிரடி சோதனை நடத்தினார்கள். அப்போது அந்த கிளப் உறுப்பினர்கள் பெயரில் அகமதாபாத்தில் இருந்து பல்வேறு இடங்களுக்கும் செல்ல சட்டத்துக்கு புறம்பாக முன்பதிவு செய்யப்பட்ட ரயில் டிக்கெட்டுகள் பதுக்கி வைத்திருப்பதை கண்டு பிடித்தனர். அங்கிருந்து ரூ.4 இலட்சம் மதிப்புள்ள 300 டிக்கெட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதையொட்டி ஒருவர் கைது செய்யப்பட்டார். கடந்த ஆண்டும் இதேபோல ரயில்வே பொலிசார் ஒரு சோதனையில் ரூ.5லட்சம் மதிப்புள்ள டிக்கெட்களை பறிமுதல் செய்தது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர் எல்லையில் இராணுவம் வாபஸ் முஷாரப் யோசனை நடைமுறைக்கு ஏற்றதல்ல

## -மத்திய அரசு பதில்

காஷ்மீர் எல்லையில் இராணுவம் வாபஸ் பெற வேண்டும் என்ற பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பின் யோசனை நடைமுறைக்கு ஏற்றதல்ல என்று மத்திய அரசு அறிவித்தது.

காஷ்மீர் பிரச்சினை தீர வேண்டுமென்றால் காஷ்மீருக்குச் சுயாட்சி வழங்க வேண்டும் என்றும், இரு நாட்களும் எல்லையில் தங்களது இராணுவங்களை வாபஸ் பெற வேண்டும் என்றும் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் நடந்த இப்தார் விருந்தில் கூறினார். இது பற்றி மத்திய அரசு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காஷ்மீருக்கு சுயாட்சி வழங்குவது இந்தியாவின் உள்நாட்டுப் பிரச்சினை. இதில் வெளிநாட்டவர் தலையீடு தேவை இல்லை. மேலும் காஷ்மீர் எல்லையில் இருநாட்டு இராணுவங்களையும் அப்புறப்படுத்தி விட வேண்டும் என்று முஷாரப் கூறும் யோசனை நடைமுறைக்கு ஒத்து வராது. அதை ஏற்கவும் முடியாது. இவ்வாறு மத்திய அரசு பதில் கூறியுள்ளது.

இதற்கிடையில் காஷ்மீர் மாநில முன்னாள் முதல் மந்திரி பரூக் அப்துல்லாவும், தேசிய மாநாட்டு கட்சித் தலைவர் உமர் அப்துல்லா ஆகியோர், பாகிஸ்தான் அதிபர் முஷாரபின் கருத்துக்குப் பதில் கூறும் போது பாகிஸ்தான் அதிபரின் புதிய திட்டத்தை காஷ்மீர் மக்கள் ஏற்றுக் கொண்டால், இது பற்றி பரிசீலனை செய்யலாம் காஷ்மீர் மக்கள் இதை ஏற்றுக் கொண்டால் நாங்கள் இது பற்றி மேற்கொண்டு பேசமாட்டோம். இந்திய பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே பேச்சுவார்தை நடக்கும் போதெல்லாம் நாங்கள் ஒதுங்கியே இருக் கின்றோம் என்றனர். பாருக் அப்துல்லாவும், உமர் அப்துல்லாவும் பிரதமர் மன்மோகன் சிங்கை பிரதமர் அவரது விட்டில் சந்தித்து காஷ்மீர் மாநிலத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினார்கள். பின்னர் அவர்கள் மத்திய உள்துறை மந்திரி சிவராஜ் பட்டேலையும் சந்தித்து காஷ்மீர் மாநிலத்தின் தற்போதைய பாதுகாப்பு நிலை குறித்து விளக்கிக் கூறினார்கள். பின்னர் முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே அத்வானி ஆகியோரையும் அவர்கள் சந்தித்துப் பேசினார்கள்.

# கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் படைக்குறைப்பு முஷாரப் கருத்துக்கு பாக். எதிர்க்கட்சிகள் கண்டனம்

(இஸ்லாமாபாத்)

"கருத்துக் கணிப்பு நடத்தி காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க முடியாது. கட்டுப்பாட்டு எல்லைக்கோட்டுப் பகுதியில் படிப்படியாக படைக்குறைப்பு செய்வது பற்றி இரு நாடுகளும் பரிசீலிக்கவேண்டும்." என்ற பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கருத்துக்கு பாக் எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தனர்.

06 கட்சிகளின் கூட்டணியான முத்தாஹிதா மஜ்லிஸ் அமல் துணைத்தலைவர் ஹபிஸ் உசேன் அகமது இது பற்றிக் கூறுகையில் " காஷ்மீரை முஷாரப் கைவிடுகிறார். எங்களிடம் கூறியதற்கு தலைகீழாக இது இருக்கின்றது. இது போன்ற முக்கிய முடிவு எடுப்பதற்கு முன் எங்களிடம் எந்த ஆலேசனையும் நடத்தவில்லை. நாட்டின் பிரதமரும் காஷ்மீர் விவகாரத்திற்கான பாரளுமன்றக் குழுவும் தனியே இருக்கும் போது அதிபர் முஷராப்பின் இந்த அறிவிப்புத் தேவையற்றது. எந்தக் கருத்தாக இருந்தாலும் அதைப் பாராளுமன்றில் விவாதித்து முடிவெடுக்க வேண்டும்." என்று கண்டித்தார்.

முன்னால் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சித் தகவல் தொடர்பாளர் பரத்துல்லாபாபர் கூறுகையில் இது போராடும் காஷ்மீர் மக்களை இழிவு படுத்துவதாக இருக்கிறது. இது ஒரு சர்வதிகாரியின் தனிப்பட்ட விருப்பம் என்றார். முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் முஸ்லிம் லீக் கட்சி தலைவர் ராஜா ஜபருல் ஹக்கூறுகையில் "ஜனவரி 6இல் இந்திய, பாகிஸ்தான் கூட்டறிக்கை வெளியான பிறகு இந்த திசையில்தான். அரசு செல்கிறது. இதை இந்தியா ஏற்குமா என்பதே தெரியாது" என்றார்.

கூரியத் மாநாட்டு கட்சித் தலைவர் சையது அலி ஷா கூறுகையில் போராடும் காஷ்மீர் மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வழங்க வேண்டும் அல்லது அவர்களையும் அழைத்து முத்தரப்புப் பேச்சு நடத்தித் தீர்வு காணவேண்டும்" என்றார்.

கூரியத் கூட்டணி முன்னாள் தலைவர் அப்துல் கனிபட் கூறுகையில் 'அதிபர் முஷாரப்பும் பிரதமர் மன்மோகன்சிங்கும் சந்தித்த பிறகு இந்தக் கருத்து வெளியாகி உள்ளது. இது ஒரு ஆலோசனை தான் எனக் கருதுகிறேன். என்றார். காஷ்மீர் ஜனநாயக சுதந்திரக் கட்சித் தலைவர் ஷபீர் அகமது ஷா அதிபர் முஷாரப்பின் கருத்தை வரவேற்றார். இந்தியா இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கூறினார்.

# முப்படைகளும் புதியதொழில் நுட்பத்துடன் நவீனப்படுத்தப்படுமென இந்.பிரதமர் உறுதி

"புதிய தொழில்நுட்பத்துடன் முப்படைகளும் நவீனப்படுத்தப்படும்" என்று இராணுவ அதிகாரிகள் கூட்டத்தில் பிரதமர் மன்மோகன்சிங் பேசினார்.

இந்தியாவின் முப்படைகளையும் நவீனப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். வீரர்களின் தரத்தையும் உயர்த்த வேண்டும் என்பதில் கருத்துடன் செயல்படுகிறோம்

இராணுவம் உட்பட முப்படைகளுக்கு வீரர்களை தேர்வு செய்யும் போது உடல் ரீதியாக மட்டும் இன்றி படிப்பிலும் திறமையான இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இராணுவம் செயற்பாட்டு முறையிலும், இராணுவ தாக்குதல் திட்டங்களை நிறைவேற்றுவதிலும்,புதுமையான முறைகளைக் கடைப்பிடிக்க தொடங்கி விட்டனர். எனவே, நாமும் நவீனமயமான புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய முப்படைகளை உருவாக்குவது அவசியமாகும். இதில் சில முக்கிய நடவடிக்கைகளை விரைவாக எடுத்தே தீர வேண்டும். அண்டை நாடுகளுடன் பிரச்சினைகளை முதலில் அரசியல் ரீதியாகப் பேசித் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறோம். இது பலன் அளிக்காவிட்டால், நாம் நம்மைப் பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# நாக்பூர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தடுமாறிய நிலையில் இந்திய அணி



இந்திய-அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடை பெற்று வரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியின இரண்டாம் நாளான நேற்று தனது முதலாவது இனிங சுக்காகத் துடுப்பெடுத்தாடும் இந்திய அணி முக் கியமான 5 விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங் களைப் பெற்றிருந்தது.

இந்த போட்டியில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடத் தவறினர்.




துடுப்பாட்டத்தில் சோப்ரா-09, ஷேவாக்-22, ராகுல் ராவிட்-21, சச்சின் டெண்டுல்கர்-08, லக்ஸ்மன்-13 ஓட்டங் களை முறையே பெற்று ஆட்டமிழந்தனர். ஆட்டமிழக் காது முகமட்ஹைப்-47,பார்த்திப்பட்டேல் ஆட்டமிழக் காது 16 ஓட்டங் களுடன் களத் தில் உள்ளனர்.



பந்து வீச்சில் மெக்ராத் இரண்டு விக்கெட்டுக்களையும்,ஷேன் வோர்ன், கிளெஸ்பி தலா ஒவ்வொரு விக்கெட்டை யும் கைப்பற்றினர்.

ஏற்கனவே அவுஸ்திரேலியா தனது முதல் இன் னிங்சில் 398 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக் களையும் இழந்தது.



இதில் டேமியன் மாட்டீன் 114, டரன்லீமன் 70 ஓட்டங் களைப் பெற மைக்கல் கிளார்க் தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தை 9 ஓட்டங்களால் தவறவிட்டு 91 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தார்.

நாக்பூர் மைதானத்தில் பல சாதனைகளை நிகழ்த் தியுள்ள சச்சின்டெண்டுல்கர் இந்த டெஸ்ட் போட்டியில் சதம் ஒன்றைப் பெற்றுக்கொள்வார். சுனில்கவாஸ்கரின் 34 சதங்களைத் தாண்டுவார் என எதிர்பார்க்கப்பட்டது அது நடக்கவில்லை.

இந்தப் போட்டியில் சச்சின் 8 ஓட்டங்களுடன் ஆட்ட மிழந்துள்ளார். இது அவர் கடந்த வருடத்தில் விளையாடிய பத்தாவது டெஸ்ட் போட்டி. இந்த பத்து டெஸ்ட் போட்டியில் பத்து இனிங்சில் ஒற்றை எண்களில் இவர் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேசுக்கு எதிரான 2 ஆவது டெஸ்ட்; நியூசிலாந்து முதல் இன்னிங்சில் 545 ஓட்டம்

நியூசிலாந்து- பங்களாதேஷ் அணிகளுக் கிடையில் நடைபெற்று வரும் இரண்டா வதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி யின் இரண்டாம் நாளான நேற்றைய ஆட்ட நேர முடிவின் போது பங்களாதேஷ் அணி தனது முதலாவது இன்னிங்சில் 3 விக் கெட்டுக்களை இழந்து 82 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

ஏற்கனவே முதல் இன்னிங்சிற்காக துடுப பெத்தாடிய நியூசிலாந்து 6 விக்கெட்டுக் களை இழந்து 545 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

இதில் அணித்தலைவர் ஸ்ரீபன் பிளமிங் இரண்டாவது இரட்டைச் சதத்தைப் பூர்த்தி செய்து 202 ஓட்டங்களைப் பெற்றார்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# எனது கிரிக்கெட் வாழ்வில் நாக்பூர் மறக்க முடியாத இடம்



நாக்பூர் எனது கிரிகெட் வாழ்வின் மறக்க முடியாத இடமாக அமைந்துவிட்டது என அவுஸ்திரேலியப் பந்துவீச்சாளர் கிளென் மெக்ராத் தெரிவித்தார்.

இங்கு நூறாவது டெஸ்டில் விளையாடுவது விசேஷசமான அனுபவம். இந்த மைல் கல்லை எட்டியதைத் தொடர்ந்து பதட்டப்படவில்லை. மாறாக மிகவும் 'ரிலாக்சாகவே' இருக்கிறேன். முந்தைய 99 போட்டிகளைப் போல்தான். இப்போதும் என்னை தயார்படுத்திக் கொண்டுள்ளேன். என்னைப் பொறுத்தவரை சொந்த சாதனைகளைக் காட்டிலும் அணியின் நலனே முக்கியம். இதைக் கருத்தில் கொண்டே இப்போட்டியிலும் செயற்பட உள்ளேன். ஆனாலும் எனது சாதனையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சங்கம் பெரிய அளவில் அங்கீகரிக்க உள்ளது. இதற்காக இந்த ஆண்டின் இறுதியில் பிரிஸ்பேனில் விழா ஒன்றுக்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். இதில் எனது குடும்பத்துடன் கலந்து கொள்ள மிகுந்த ஆர்வத்துடன் உள்ளேன்.

நூறுபோட்டி குறித்து நான் பெரிதாக எடுத்துக்கொள்ளாத போதும், மீடியாவில் இருந்து எப்படிச் சாதித்தீர்கள் என்கிறார்கள். இதற்குக் காயம் அடையாததே முக்கிய காரணம். அதாவது, சர்வதேச கிரிக்கெட்டில் காலடி எடுத்து வைத்த முதல் 9 ஆண்டு களுக்கு எனக்குக் காயம் எதுவும் ஏற்படவில்லை. இதை நான் மிகப்பெரும் சாதனை யாகவே கருதுகிறேன் என்றார்.

# மும்பை டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் கங்குலி விளையாடுவது கஸ்ரம்



காயம் காரணமாக மும்பை டெஸ்டிலும் கங்கு இடம்பெறமாட்டார் எனத் தெரிகிறது.

நேற்று முன்தினம் நாக்பூரில் மூன்றாவது டெஸ்ட் துவங்கியது. இப்போட்டியில் தொடைப் பகுதியில் ஏற் பட்ட தசைப் பிடிப்பு காரணமாக கங்குலி பங்கேற்க வில்லை. இது பற்றிய விபரத்தை முன்னரே தெரி விக்காதது குறித்து சர்ச்சை எழுந்தது. இதற்கு அணியின் பிசியோதரபிஸ்ட் ஆன்ரூட் லெய்பஸ் விளக்கம் அளித்துள்ளார்.

நேற்றுக் காலையில் நடந்த உடல் தகுதி சோதனையின் போது கங்குலி மிகவும் சிரமப்பட்டார். இதனால் இவர் இடம் பொறாதது குறித்து முன்னரே அறிவிக்க இயலவில்லை. இரண்டு நாட்களுக்கு முன் நடந்த பயிற்சியின் போது இவருக்கு தொடைப் பகுதியில் தசைப் பிடிப்பு ஏற்பட்டது. ஆனாலும் போட்டி துவங்குவதற்கு முன்பாக தேறிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இவருக்கு எலும்புப் பகுதியில் ஸ்கேன் எடுத்து பரிசோதனை செய்ய உள்ளோம். இதற்குப் பிறகே எத்தனை நாட்கள் விளையாட முடியாது என்பதைத் தெரிவிக்க முடியும் என்றார்..

# நியூசிலாந்து ஒருநாள் அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்லின்

பங்களாதேசுக்கு எதிராக மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் நியூசிலாந்து அணி யில் வேகப்பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்லின் இணைக்கப் பட்டுள்ளார்.

அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டெரல்டபி இன் னும் பூரணமாகக் குணமாகாத நிலையில் பிராங்லின் அணியில் இணைக்கப்பட்டுள்ளார்.

பிராங்லின் பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்சில் ஹெட்ரிக் உட் பட 6 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதேவேளை அணியின் தலை வர் ஸ்ரீபன் பிளமிங் ஒருநாள் தொட ரில் இருந்து நீங்குவதால் அவருக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர் டானியல் விக்டோரி அணித்தலை வராக நியமிக்கப்பட்டுள்ளார்.


நியூசிலாந்து ஒருநாள் போட்டிக் கான வீரர்கள் விபரம் மத்யூசின் கிளையர், நாதன் அஸ்டல், பீட்டர் வல்டன், ஹேர்மிஷ் மார்ஷல், கிரேக் மெக்மிலன், ஸ்கொட் ஸ்டைரிஸ், கிரிஸ்கெய்ன்ஸ், அன்ரூவ் அடம்ஸ், கிரிஸ்ஹறிஸ், பிரண்டன் மெக்லம், டானியல் விட்டோரி(அணித்தலை வர்) இயன்பட்லர், கைல்மில்ஸ், ஜேம்ஸ் பிராங்லின்.

# அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஹொக்கி டெஸ்ட் இந்திய ஹொக்கி அணிக்கு முதல் வெற்றி

டெஸ்ட் ஹொக்கியில், நேற்று இந்திய அணி அவுஸ்திரேலியாவை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது. 21 வயதுக்குட்பட்டோருக்கான டெஸ்ட் ஹொக்கி தொடரில் இந்திய, அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன.முதல் போட்டியில் இந்திய அணி (0-6) படுதோல் வியடைந்தது. இந்நிலையில் நேற்று அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரில் இரண்டாவது போட்டி நடந்தது. இதில் இந்திய வீரர்கள் தொடக் கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்தினர்.தலைவர் நிதின்குமார் அணியில் முதல் கோலை அடித்தார். இதற்குப் பிறகு பிரேந்தர் லக்ரா, ஜதிந்தர் பால்சிங் தலா ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

# தூஸ்ரா முறையில் பந்துவீச — தனக்கு அனுமதி வழங்கப்படும்

## முரளிதரன் நம்பிக்கை



முரளியின் தூஸ்ரா பந்து வீச்சு முறை காணாமல் போய் விடுமோ? அல்லது சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் அதற்கு தடை விதித்து விடுமோ? என்ற ஐயப்பாட்டுடன் அனைவரும் இருக்க இது குறித்து ஆய்வு செய் யும் குழு தூஸ்ராவுக்குச் சாதக மான முடிவைக் கொடுத்துள்ளது.

இதனால் முரளி தூஸ்ரா பந்து வீச்சைப் பயன்படுத்தத் தயாராக இருப்பதாகவும் இந்த சந்தேகம் தீர்க்கப்பட்டு, எனக்கு அனுமதி வழங்கப்படும் என்ற நம்பிக்கை யுடன் இருப்பதாகத் தெரிவித்துள் ளார்.

ஆறு முன்னாள் வீரர்களும், மூன்று உயிரியல் தொழில் நுட்ப வியலாளர்களும் ஆராய்வில் ஈடு பட்டனர்.

எனவே இதன் அடிப்படையில் தூஸ்ரா முறையில் பந்து வீச எனக்கு இனுமதி கிடைக்கும் என நம்பப்படுவதாக முரளி தெரிவித் துள்ளார்.

இந்தப் பந்து வீச்சைத் தொடர்ந்து வீசுவதற்கு எனக்கு அனுமதி கிடை க்குமோ என சந்தேகம் கொண்டி ருந்தேன் இருந்தாலும் இப்போது எனக்கு அனுமதி கிடைககும் என நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இதற்கான விடை நவம்பர் மாதம கிடைத்து விடும் இதற் கிடையில் தூஸ்ராவுடன் மீண்டும் கிரிக்கெட்டில நுழைந்து அடுத்தடுத்து விக்கெட்டை வீழ்த்த நம்பிக்கை கொண்டிருப் பதாக முரளி தெரிவித்துள்ளார்




## தலைவராக ஜடேஜா



ரஞ்சிப் போட்டிக் கான டில்லி கிரிக் கெட் அணிக்கு அஜய ஜடேஜா தலைவராக நியமிக்கப்பட்டுள் ளார். கிரிக்கெட் சூதாட்ட வழக்கில் சிக்கி, தற்போது விடுவிக் கப்பட்ட முன்னாள் வீரர் அஜய் ஜடேஜா, டில்லி அணிக்காக விளையாடுகி றார். அடுத்த மாதம் நடக்கும் ரஞ் சிக் கோப்பைப் போட்டிகளில் டில்லி அணி பங்கேற்கிறது. இந்தப் போட் டிக்கான டில்லி அணித தலைவராக வீரேந்தர் ஷேவாக் நியமிக்கப் பட்டிருந்தார். சர்வதேசப் போட்டி களில் அவர் பங்கேற்க வேண்டியி ருப்பதால இந்தத் தொடரில் கலந்து கொள்ள முடியாது எனத் தெரிவித்தார்.

# பாக். அணியின் புதிய விக்கெட் காப்பாளராக சமரன் அக்மால் இணைப்பு

சிறிலங்கா பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் இன்று கராச்சியில் ஆரம்பமாகும். இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட் டிக்கான அணியிலிருந்து சிரேஷ்ட விக்கெட் காப்பளர் மொய்ன்கான் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக சமரன் அக்மால் அணியில் உள்வாங் கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட்டின் பிரதம தெரிவாளர் வசிம் பாரி தெரிவித்துள்ளார்.

மொய்ன்கான் துடுப்பாட்டத்தில் திறமை காட்டாததே அவரது நீக்கத்திற்கு காரணம் என பாரி தெரிவித்துள்ளார்.


இதேவேளை 15 வயதான விக்கெட் காப்பாளர் கால்கர்னைன் ஹைதரும் 15 வீரர்களை உள்ளடக்கிய அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# அவுஸ். வீரர் டரன்லீமன் காயம்; தொடர்ந்து விளையாடுவது சந்தேகம்



டேமியன் மார்ட்டினுடன் இணைந்து அவுஸ்திரேலிய அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்திய லீமன் 70 ஓட்டங்களைச் சேர்த்து தேநீர் இடைவேளைக்குச் சற்று முன்னதாக ஆட்டமிழந்தார். முன்னதாக, ஒரு கட்டத்தில் 2 ஆவது ஓட்டம் எடுக்க முற்பட்ட போது அவருக்கு தசைப் பிடிப்பு ஏற்பட்டது. இதையடுத்து 'பை-ரன்னர்' உடன் ஆட்டத்தைத் தொடர்ந்தார் இவர். 'வலது தொடையில் லீமனுக்குத் தசைக் கிழிவு எற்பட்டுள்ளது. 24 மணிநேரத்துக்குப் பிறகே அவருக்கு ஏற்பட்டுள்ள காயத்தின் உண்மை நிலை தெரியவரும்' என அவுஸ்திரேலிய அணியின் தகவல் மேலாளர் ராஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதையடுத்து அடுத்த டெஸ்டில் லீமன் விளையாடுவது சந்தேகம் எனத் தெரிகிறது. மார்ட்டினுடன் இணைந்து 148 ஓட்டங்களைக்களைச் சேர்த்தார் லீமன்.

## சிந்தனைக்கு



வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால் தான், நாம் வன்முறைப் போராட்டத்தைத் தழுவிக் கொண்டோம்

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 28-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## விரக்தி நிலையில் தமிழர்!

சமாதானப் பேச்சுவார்த்தைகள் புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகள் மற்றும் அரசியல் தீர்வு விடயங்களில் தமிழ் மக்கள் விரக்தி நிலையை அடைந்து வருகின்றனர். இம் முறை ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட விடுதலைப்புலிகளின் அரசியற் குழுவினரும் தம்மைச் சந்தித்த அந்தந்த நாட்டுப் பிரதிநிதிகளிடமும் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

நீண்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் 2002 பெப்ரவரியில் புரிந்துணர்வு உடன்பாட்டை அடுத்து புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படும் எனவும் யுத்தினால் ஏற்பட்ட பாரிய இழப்புக்களை ஈடுசெய்ய முடியாதுபோனாலும் இயல்பான வாழ்வொன்றிற்குத் திரும்புவதற்கு இது உதவியாக இருக்குமெனவும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டதும் மக்களின் இவ் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்யுமாற்போன்று புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகள் பற்றி நிரம்பவே பேசப்பட்டது. ஆயினும் சிறிலங்கா அரசாங்கங்கள் இவ் விடயத்தில் அக்கறை காட்டவில்லை. அதற்கும் மேலாக இவற்றிற்கு முட்டுக்கட்டை போடும் வகையிலேயே நடந்து கொண்டன.

இதன் பின்னர் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்துப் பேச்சுக்கள் எழுந்த போதும் மக்களிடம் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் குறித்த எதிர்பார்ப்புக்களே மேலெழுந்தது. இதன் காரணமாகவே விடுதலைப்புலிகள் முன் வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு தேர்தல் மூலம் தமது முழு ஆதரவையும் தெரிவித்தனர்.

ஆனால் இதன் பின்னரும் இவ் விடயத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை. மக்களின் வாழ்க்கை மேலும் மோசமடைந்து செல்வதோடு மக்கள் இவற்றின் மீதான நம்பிக்கையும் இழந்து வருகின்றனர். இதன் விளைவே இவற்றின் மீதான தமிழ் மக்களின் விரக்தி நிலைக்குக் காரணமாகும். அதாவது புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகள் மீதான நம்பிக்கையீனம் சமாதானப் பேச்சுவார்த்தை, அரசியல் தீர்வு என்பவை மீதான விரக்தியாக வளர்ச்சி கண்டு வருகின்றது.

இதற்கு ஏற்றாற் போன்றதாகவே அரசின் நடவடிக்கைகளுள் என. அதாவது ஒரு புறத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதாகவுமா? என்ற சந்தேகத்தை மக்கள் மத்தியில் தீவிரமாக எழுப்பிவருவதாகவுள்ளது. ஏனெனில் ஆளும் கூட்டணிக்குள்ளேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பான தீவிரமான முரண்பாடுகள் உள்ளன.

அதாவது அரசாங்கத்தின் ஒரு அங்கமாகவுள்ள ஜே.வி.பி தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு தீவிர எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றது. ஜே.வி.பியின் எச்சரிக்கைகளையும் மீறிச் சனாதிபதி சந்திரிகா பேச்சுவார்த்தைக்குச் சென்றால் அரசாங்கத்தைக் கவிழ்த்து விடவும் ஜே.வி.பி தயாராகவே உள்ளது போல் தெரிகின்றது. இந் நிலையில் ஆட்சி அதிகாரத்தைப் பணயம் வைத்து சனாதிபதி சந்திரிகா துணிச்சலான அரசியல் காய் நகர்த்தலை மேற்கொள்வாரெனத் தமிழ் மக்கள் எவருமே எதிர்பார்க்கவில்லை. மாறாக எதிர்பார்ப்பதற்கு அவரின் வரலாற்றில் இடமுமில்லை.

அடுத்ததாக சிறிலங்கா அரசு யுத்த நிறுத்த காலத்தை அனுகூலமாகப் பாவித்து தமது ஆயுதப் படைகளைப் பலப்படுத்துவதையும் நவீனப்படுத்துவதையுமே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றமை வெளிப்படையானது. இந்த வகையில் இந்தியா, அமெரிக்கா, சீனா போன்றவற்றிலிருந்து பெருமளவு ஆயுதக்கொள்வனவைச் செய்வதில் ஆர்வம் காட்டுவதிலும் இந்தியா, அமெரிக்கா போன்றவற்றுடன் பாதுகாப்பு உடன்பாடுகளைச் செய்வதிலுமே அது தீவிர கவனம் கொண்டுள்ளது.

அத்தோடு இந்தியாவுடன் சிறிலங்கா அரசு செய்து கொள்ளும் பாதுகாப்பு உடன்பாடு இராணுவ ரீதியில் மட்டுமல்ல அரசியல் ரீதியிலும் இனப்பிரச்சினைத்தீர்வைப் பாதிக்குமெனத் தமிழ் மக்கள் பெரிதும் நம்புகின்றனர்.

ஏனெனில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா தங்களுக்கென தனிப்பட்டதொரு அணுகுமுறையையும், பார்வையையும் கொண்டுள்ளதாக உணரும் தமிழ் மக்கள் இவ் அணுகுமுறை தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கும் உணர்வுகளுக்கும் ஏற்ற தாக இருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்றே நம்பிக்கை கொண் டுள்ளனர். இவ்வாறான தமிழ் மக்களின் உணர்விற்குக் கடந்த கால இந்திய அரசின் செயற்பாடுகளே காரணமாயுள்ளன.

இத்தகைய சூழ்நிலை தமிழ் மக்களின் எதிர்காலம் குறித்துப் பெரும் விரக்தி நிலைக்கு இட்டுச் செல்வதாகவே உள்ளது. இதனைப் பிரதிபலிப்பதாகவே அண்மைய ஐரோப்பிய விஜயத்தில் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் தமிழ் மக்களின் விரக்தி நிலை பற்றி விபரிக்க வேண்டியதாயிற்று. இதனைச் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ளுதல் கடினமான தல்ல.

இந் நிலையில் சர்வதேச சமூகமும் தமது விரக்தி நிலையைப் போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

# கனேடிய தூதரகத்தில் பௌத்த பிக்குகள் அவமதிக்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு

### பௌத்த அமைப்புகள் சுமத்துகின்றன

விசா பெற்றுக்கொள்வதற்காக கனடா தூதரகத்திற்குச் சென்ற பிக்குவை அவமதித்தமை குறித்து அதன் தூதரக அதிகாரிகள் உடனடியாகப் பௌத்த மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டுமென தேசிய சங்க சம்மேளனமும், தேசிய பௌத்த பாரம்பரிய அமைப்பும் தெரிவித்துள்ளன. இச் செயலை மிக வெறுப்புடன் கண்டிப்பதாகத் தெரிவித்துள்ள அவர்கள் இது மிக மோசமான செயலெனக் சுட்டிக் காட்டியுள்ளன.

இதேவேளை பௌத்த பிக்குகள் மீது 'அந்த்ராக்ஸ்' தொடர்பான சந்தேகம் தெரிவிக்கப்பட்டமை குறித்து பௌத்த பேரினவாத கட்சியான ஜாதிக ஹெல உறுமய சீற்றமடைந்துள்ளது.

இது தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சிற்கு அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வண. கொட்டகொல அமரகீர்த்தி தேரோ காரசாரமான கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார். கனேடியத் தூதரகத்திற்கு நேற்றைய தினம் இலங்கை பௌத்த பிக்கு ஒருவரும் தாய்லாந்துப் பிக்குகள் இருவரும் விசா பெறச் சென்றிருந்தார்கள். இலங்கை பௌத்த பிக்குவின் கடவுச் சீட்டில் ஒரு வகை பவுடர் காணப்பட்டதையடுத்து தூதராலய அதிகாரிகளுக்கு அந்த்ராக்ஸ்' தொடர்பான சந்தேகம் எழுந்ததால் தூதரகம் மூடப்பட்டது.குறிப்பிட்ட 3 பௌத்த பிக்குமார்களும் உள்ளே பாதுகாப்பு அதிகாரிகளினால் அழைக்கப்பட்டு அவர்களது காவி உடைகள் களையப்பட்டு குளிப்பாட்டப்பட்டு சோதனைக் காகப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இது தொடர்பான விடயங் களை அந்தக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கொட்டகொலஅமரகீர்த்தி தேரோ, பௌத்த நாடான இலங்கையில் பௌத்த பிக்கு மாருக்கு ஏற்பட்ட இந்த அவமானத் திற்குக் கனேடிய தூதராலயம் பகிரங்க மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று வலியுறுத் திக் கேட்டுள்ளார்.

# பிக்குமார் குறித்த அணுகுமுறை ஐ.தே.க கவலை தெரிவிப்பு

கனேடியத் தூதரகத்தில் 3 பௌத்த பிக்குமார் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட்ட அணுகுமுறை குறித்துக் கவனம் செலுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அறிக்கையொன்றை விடுத்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி இச்சம்பவம் கவலைக்குரிய விடயமென்று தெரிவித்துள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை நடத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு வெளிநாட்டமைச்சு, கனடா தூதரகம் ஆகியவற்றிடம் ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

# வரவுசெலவுத் திட்டத்தை ஆராய்ந்த பின்பே ஆதரவளிப்பது பற்றித் தீர்மானம்

### ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் தொடர்பாக நன்கு ஆராய்ந்த பின்னரே அதற்கு ஆதரவளிப்பது குறித்து தீர்மானிக்கவிருப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத் திட்டத்தால் மக்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் மற்றும் புத்த சாசனம் தொடர்பாக முன்வைக்கப்படும் விடயங்கள் ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டே அதற்கு ஆதரவு வழங்குவது பற்றி முடிவு எடுக்கப்படுமென ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பிரதித்தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக கட்சி ஏற்கனவே கொண்டிருந்த நிலைப்பாட்டில் மாற்றம் எதுவும் இல்லையென்று தெரிவித்தார். அரசாங்கத்தின் புதிய வரவு-செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

### மேலதிக செயலாளர்களை நியமிக்கும்

# சனாதிபதியின் ஆலோசனைக்கு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ எதிர்ப்பு

வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறும் இரண்டு அமைச்சுக்களின் செயலாளர்களுக்குப் புறம்பாக மேலதிக செயலாளர்கள் இருவரை நியமிக்கும் சனாதிபதியின் யோசனையை பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ நிராகாத்துள்ளார். நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சனாதிபதி தெரிவித்த ஆலோசனைக்குப் பதிலளித்துள்ள பிரதமர் அமைச்சுக்களின் செயலாளர்கள் அமைச்சுக்களின் பரிந்துரைக்கு அமைவாகவே நியமிக்கப்படவேண்டும் எனத் தெரிவித்ததோடு அமச்சர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்படாது அவர்களுக்குப் புறம்பான கட்டுப்பாடுகளைச் செலுத்துவது சாத்தியமற்றது எனத் தெரிவித்துள்ளார். இதேவேளை தற்போது அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளியைக் கட்டுப்படுத்த புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளதாகத் தெரிவித்த சனாதிபதி எதிர்வரும் 4ஆம் திகதிக்கு முன் பாக அதனைச் சமர்பிக்க உள்ள தாகவும் உறுதியளித்துள்ளார்.(33)

### மலேசியாவிலிருந்து வெளியேற

# சட்ட விரோத குடியேறிகளுக்கு பொதுமன்னிப்புக்காலம் அறிவிப்பு

மலேசியாவில் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ள இலங்கையர்கள் அந்த நாட்டிலிருந்து வெளியேறுவதற்கான பொதுமன்னிப்புக் காலமொன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பொதுமன்னிப்புக் காலம் அந்த நாட்டில் சட்ட விரோதமான முறையில் குடியேறியுள்ள சகல வெளிநாட்டவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் இந்தப் பொதுமன்னிப்புக் காலம் இரு வார காலத்துக்கு அமுலில் இருக்கும். இந்த கால எல்லைக்குள் மலேசியாவில் இருந்து வெளியேறும் சட்ட விரோத குடியேற்றவாசிகள் அபராதம் செலுத்தத் தேவையில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும், குற்றச் செயல்களோடு தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ள வெளிநாட்டவர்களுக்கு இந்தப் பொதுமன்னிப்புக் காலம் வழங்கப்பட மாட்டாது என்று மலேசிய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. இதேவேளை, மலேசியாவில் சட்டவிரோதமாகக் குடியேறியுள்ள இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டும் விசேட செயற்றிட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளதாகவும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதரகம் அறிவித்துள்ளது.

# வரவு செலவுத் திட்டத் தயாரிப்பில் வெளிநாட்டு பேராசிரியர்களுக்குத் தொடர்பில்லை

### சிறிலங்கா நிதியமைச்சு அறிவிப்பு-

(கொழும்பு)

இம்முறை அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டம் வெளிநாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்துள்ள செய்தியில் எந்த உண்மையும் இல்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது.மேலும் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்துள்ள பேராசிரியர் அமெரிக்க நிதி வழங்கும் உதவித்திட்டத்தின் கீழ் நடைபெறும் நடைமுறை குறித்து அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்காகவே இவர் இலங்கை வந்துள்ளார் என நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

# திருமலையில் புலிகளின் முகாம் குறித்து கண்காணிப்புக்குழுவுடன் பேசுவோம்

## -சிறில. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்

திருகோணமலைத் துறைமுகம் கடற்படை முகாம் மற்றும் ஏனைய முகாம்களுக்குப் புலிகளினால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் பற்றி பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவும், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும் சமர்ப்பித்துள்ள அறிக்கைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதால் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் பேச்சு வார்த்தை நடத்தவேண்டியிருக்கிறதெனப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத்தெரிவித்துள்ளார்.

திருமலை கடற்படைத் தலைமை அலுவலகத்திற்கும், துறைமுகத்திற்கும் வடக்கேயும், தெற்கேயும் புலிகள் அமைத்துள்ள 15 முகாம்கள் காரணமாக அப்பிரதேசத்தில் பாதுகாப்பு நிலையங்களுக்குப் பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சின் புலனாய்வுப்பிரிவு அரசிற்கு அறிவித்துள்ளது.

ஆயினும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு கடந்த வாரம் அரசிற்கு சமர்ப்பித்த இறுதி அறிக்கையில் 05 முகாம்கள் தவிர ஏனையவை யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முன்னரே புலிகளால் நிர்மானிக்கப்பட்டிருந்ததென குறிப்பிட்டது. இதுகுறித்து இரு சாராரும் கலந்துரையாடி அரசியல் ரீதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென திருமலையிலுள்ள புலிகளின் முகாம்கள் தொடர்பாக யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை பேச்சு வார்த்தை நடத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சுவிஸ் பிரஜை கொலையுடன் புலிகளுக்குத் தொடர்புகள் இல்லை

## - கண்காணிப்புக் குழு அறிவிப்பு

மட்டக்களப்பு மாமாங்கத்தில் சுவிஸ் பிரஜையான ஹான்ஸ் வுலரிச் ஹேர்சோக் (62) கிரனைட் வீசிக் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் விடுதலைப் புலிகளுக்கு தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை என யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இக் கொலை தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணைகள் மேற்கொண்டுள்ளதாகக் கூறிய மட்டக்களப்பு மாவட்ட தலைமைக் கண்காணிப்பாளர் சுசானா ரிங்கார்ட் பெட்ரசன், விடுதலைப் புலிகள் இச்சம்பவத்துடன் தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை என்றும் தெரிவித்துள்ளார். இதே வேளை, இக் கொலை தொடர்பாக பல்வேறு கோணங்களில் தாம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாகத் தெரிவித்த பொலிஸ் அதிகாரியொருவர், தேவைப்படும் பட்சத்தில் கொழும்பிலிருந்து விசேட குற்றப் புலனாய்வுத்துறையினர் வரவழைக்கப்படலாம் என்றும் தெரிவித்துள்ளார். (32)

### படைமுகாம்...

என்னும் இது புதைக்கப்பட்ட இடத்திலிருந்து 10.மீற்றருக்குள் இராணுவத்தினரின் முகாம் ஒன்று இருந்ததாகவும் குறிப்பிட்டனர். அத்துடன் புதைக்கப்பட்ட இடமும் தென்னை மரத்தின் அடிப்பகுதியாகவே காணப்பட்டது என்றும் தெரிவித்தனர்.

இராணுவ ஆக்கிரமிப்பு காலங்களில் அப்பகுதியைச் சேர்ந்த10 பேருக்கு மேற்பட்டோர் காணாமற் போயுள்ளதாகவும் தமக்கு மக்கள் முறைப்பாடு செய்துள்ளனர். என்றும் குறிப்பிட்டனர்.

மனித உருவத்தில் கிடைக்கப்பட்ட பகுதிகளாக மண்டை ஓடு பற்கள் கைப்பகுதி, கால்ப்பகுதி மற்றும் சில பகுதிகளும் கிடைகப் பெற்றுள்ளன. அத்துடன் எலும்பு காணப்பட்ட பகுதியில் தென்னைமரத்தில் ஏறுவதற்குப் பயன்படுத்தும் கயிறு வளையம் ஒன்றும் காணப்பட்டது. மேலதிக விசாரணைகளை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (கு, தீ)

### சூரிய...

செய்து வந்த கடையில் வைத்தே கூரிய ஆயுதம் ஒன்றினால் வயிற்றுப் பகுதியில் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கொலை சம்பந்தமான மேலதிகவிசாரணைகளைத்தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர். (தீ)

### பாரவூர்திகள்...

இதன்காரணமாக உந்துருளிகள் ஈருருளிகள் தவிர்ந்த ஏனைய வாகனங்கள் புளியம் பொக்கணைச் சந்தியில் வைத்து வட்டக்கச்சியூடாக திருப்பிவிடப்படுகின்றன.

இதேவேளை புளியப்பொக்கணை வட்டக்கச்சிப் பாதையில்வெள்ளம் பாய்ந்தோடுவதால் அதனூடான போக்குவரத்தும் மழை தொடரும் பட்சத்தில் தடைப்படுமென மக்கள் கூறுகின்றனர்.

### ஜப்பானிய...

விக்கிரமசிங்க, மற்றும் ஏனைய அரசியல்தலைவர்கள்,கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ஆகியோரையும் சந்திக்கத் திட்டமிட்டுள்ளதாக அத்தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜப்பானிய விசேட தூதுவர் இன்று இலங்கைக்கு வருகை தருவது தெரிந்ததே.

### கைக்குண்டு...

என்ற முஸ்லிம் இளைஞரும்,கும்புறுமுனை வாழைச்சேனை மட்டக்களப்பு வீதியில் ஆட்டோ ஒன்றில் சென்றுகொண்டிருந்தபோதே கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நேற்றுமாலை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம் அஸ்மீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இவர்களை எதிர்வரும் எட்டாம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

இதேவேளை கும்புறு மூலை கல்குடா வீதியில் நேற்றுக்காலை உந்துருளியில் சென்ற கிரானைச் சேர்ந்த முத்துலிங்கம் உதயகுமார் என்பவரும் கைக்குண்டு வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரை இன்று நீதிமன்றில் ஆஜர் செய்யவுள்ளதாக கல்குடாப் பொலிசார் கூறியுள்ளனர்.

### பாது...

அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னைய கொடுப்பனவுகளுக்காகவே அதிக தொகை ஒதுக்கப்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால் எந்தக் காரணமும் இல்லாத போது இவ்வாறு அதிக தொகை ஒதுக்கீடு செவ்வது நிலமையை மேலும் சிக்கலாக்கலாம் என எச்சரித்துள்ளார். இதேவேளை இந்த அரசாங்கத்தின் முழுமையான வரவு செலவுத்திட்டத்திற்கு எதிராக வாக்களிப்பதா? வாக்களிப்பில் கலந்து கொள்ளாது விடுவதா? ஆதரவளிப்பதா? என்பது குறித்து எதிர்வரும் வாரத்தில் தாம் கூடி முடிவெடுக்கவுள்ள்ளதாக தெரிவித்தார். (32)

# சாவுச் செய்தியால் துயரில் ஆழ்ந்துள்ளோம்

## அமரர்

## பொ.வேணுகோபால வாணிதாசன் (வேணுகோபால்)

### (தீவக வலயக்கல்விப்பணிப்பாளர்)

யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினராகவும் தீவகக்கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி வந்த பொ.வேனுகோபாலவாணிதாசன் அவர்களின் திடீர் அகாலச் சாவுச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம்.

முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு கோட்ட கல்விப் பணிப்பாளராகவும், முல்லைத் தீவு வலயம், வடமராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளராக நெருக்கடி நிறைந்த காலங்களில் வன்னியிலும், வடமராட்சியிலும் பணியாற்றியதுடன். மிகவும் கஸ்ரப் பிரதேசமான தீவகத்தில் கல்விப் பணியை ஏற்று அப்பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உழைத்து வந்த சேவையாளனின் இழப்பு கல்விச் சமூகத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், யாழ்.கல்விச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தமிழீழக் கல்விக்கழகம்
தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை
தமிழீழ மாணவர் அமைப்பு

சி.10591

# தீவக வலயக் கல்விப்பணிப்பாளரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பு

தீவகக்கல்வி வலயத்தின் வலயக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவந்த அமரர் பொ.வேணுகோபால வாணிதாசன்(வேணுகோபால்) அவர்களின் சாவு குறித்து தமிழீழக் கல்விக்கழகம், தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை, தமிழீழ மாணவர் அமைப்பு என்பன தமது இரங்கலைத் தெரிவித்துள்ளன.

இதுகுறித்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பிராகவும் கடமையாற்றி வந்த இவரின் திடீர் அகால சாவுச்செய்தி கேட்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தோம். அத்துடன் முல்லை மாவட்ட மாந்தை கிழக்கு கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும், முல்லைத்தீவு வலயம், வடமராட்சி கல்வி வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளராக நெருக்கடி நிறைந்த காலங்களில் வன்னியிலும், வடமராட்சியிலும் பணியாற்றியதுடன் மிகவும் கஸ்ரப்பிரதேசமான தீவகத்தில் கல்விப்பணியை ஏற்று அப்பிரதேச மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்கு உழைத்து வந்த சேவையாளரின் இழப்பு கல்விச் சமூகத்திற்குப் பேரிழப்பாகும்.

அன்னாரின் திடீர் மறைவினால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும், யாழ்.கல்விச்சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரக்கங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-புதுக்குடியிருப்பு முல்லை வீதியில்-

# மின்கம்பத்துடன் மோதிய வாகனம் மரத்துடனும் மோதிச் சேதம்



புதுக்குடியிருப்பில்..



மந்துவிலில்.. படங்கள் தவரட்ணம்

புதுக்குடியிருப்பில் நேற்றுக் காலை இரண்டு வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளது. இதனால் ஒருவர் காயமடைந்துள்ளதுடன். வாகனமும்சேதடைந்துள்ளது. புதுக்குடியிருப்பு முல்லை வீதியில் அப் பகுதி பாற் பண்ணைக்கு முன்பாக கயஸ்வாகனம் ஒன்று மின்கம்பத்துடன் மோதுண்டதுடன் அருகில் இருந்த மரத்துடனும் மோதிப் பாரிய சேதத்துக் குள்ளானது. இவ் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார். இவ்வாகனமும் பலத்த சேதத் துக்குள்ளாகியுள்ளது. தொடர்ந்து அவ்வீதியில் மந்துவில் சந்திக்கு அருகில் கூலர் வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகி சேதடைந்துள்ளது. (08)

# வரவு செலவுத்திட்டத் தயாரிப்பில் வெளிநாட்டுப் பேராசிரியர்களுக்குத் தொடர்பில்லை

## -சிறிலங்கா நிதியமைச்சு அறிவிப்பு-

(கொழும்பு)

இம்முறை அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத்திட்டம் வெளிநாட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரினால் தயாரிக்கப்பட்டுள்ளதாக சிங்களப் பத்திரிகை ஒன்றில் வெளிவந்துள்ள செய்தியில் எந்த உண்மையும் இல்லை என நிதி அமைச்சு அறிவித்துள்ளது. மேலும் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்துள்ள பேராசிரியர் அமெரிக்கா நிதிவழங்கும் உதவித் திட்டத்தின் கீழ் நடைபெறும் நடைமுறை குறித்து அமெரிக்க அரசாங்கத்திற்கு அறிவிப்பதற்காகவே இவர் இலங்கை வந்துள்ளார் என நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது.

### வளவினுள்...

கொண்டிருந்த க.நாகநாதன் (வயது 34) புலோலி மற்றைய நபர் குறித்த தனியார் பயணிகள் பேருந்தில் பயணித்த பயணியான க.மகேஸ்வரன் (வயது56)அல்வாய் ஆகியோராவர்.

இதனிடையே விபத்ததுச்சம்வம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வரும்நெல்லியடிப் பொலிசார், சாரதியையும் கைது செய்துள்ளனர். பொன்னையா வேணுகோபாலவாணிதாசன் பருத்தித்தறை ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபருமாவார். (27,33)

### ஜே.வி.பி...

எனவும், கூட்டமைப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நியமிக்கப்பட்ட அதியுயர் பீடத்திற்கு அது சமர்ப்பிக்கப்பட்டுப் பிரச்சினைகள் தீர்க்கப்படுமெனவும் அவர் கூறினார்.

### ஆணைக்கோட்டை...

பிள்ளைகளும் வழங்கிய வாக்கு மூலமொன்றின் அடிப்படையில் மற்றோர் மகளைச் சந்தேகத்தின் அடிப்படையில் மானிப்பாய்ப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அத்துடன் கொலைச் சம்பவம் தொடர்பான விசாரனணகளை மானிப்பாய்ப் பொலிசார் மேற் கொண்டுள்ளனர். (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.